பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்




டொலர் கோர்ப்பரேஷன்
14, டாம் வீதி கொழும்பு

Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசீய தினசரி National Tamil Daily
மலர் 8 (19-6-66) இதழ் 132
பராபவ ஆனி 5 ஸபர் 29 ஞாயிற்றுக்கிழமை

மில்க் வைற்
நீல சோப்
புதிய இரசாயனம்
சேர்க்கப்பட்
புதிய மேலுறையுடனும்
விற்பனையாகின்றது.

# தொழிலாளர் கழகம் புனராலோசனை

## "வேலைநிறுத்தம் அரசியல் பிரச்சினையாகலாகாது"

### வேலைநிறுத்த முடிவுகள் பற்றி கழகத் தலைவர் விளக்கம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

**எதிர்க்கட்சிகள் ஒரு அரசியல்வேலைநிறுத்தத்தை ஆரம்பிக்கும்பட்சத்தில், இலங்கை தொழிலாளர் கழகம், இப்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலை நிறுத்தத்தில் பங்குபற்றுவதாக எடுத்த முடிவைப் புனராலோசனை செய்ய வேண்டி வரும்.**

இலங்கை தொழிலாளர் கழகத்தலைவர் செனட்டர் சு. நடராசா, தொழிலாளர் கழகத்தின் வேலைநிறுத்தம் சம்பந்தமாக வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

அரசாங்கத்திலும் இதர துறைகளிலும், உள்ள தொழிலாளர்களுக்கு, ரூபா 71-50பஞ்சப்படியாக, பலகாலமாகவழங்கப்பட்டு வருவது யாவரும் அறிந்ததே. உயர்ந்து வரும் வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க முடியாது தத்தளிக்கும் தோட்டத்தொழிலாளர் தமக்கும் இந்தப் பஞ்சப்படி வழங்கப்படவேண்டுமென்று, கோரிவந்தார்கள்.

இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் வருடாந்த மகாநாட்டிலும் இக்கோரிக்கை விடுக்கப்பட்டது. இந்த 17-50 பஞ்சப்படி வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தே, ஜனநாயகத்தொழிலாளர் காங்கிரஸ், சென்ற வாரம் வேலைநிறுத்தத்தை ஆரம்பித்தது. இக்கோரிக்கை, இலங்கை தொழிலாளர் கழகத்தினதும் கோரிக்கையானபடியால் 17-6-65ல் கூடிய செயற்குழுக் கூட்டத்தில், இவ்வேலைநிறுத்தத்தில் இலங்கைத் தொழிலாளர் கழகமும் கலந்து கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டது.

எதிர்க் கட்சியினர் சார்பில் அரசாங்கத்தை எதிர்க்கும் பொருட்டு 15 கோரிக்கைகளை முன்வைத்து, ஒரு அரசியல் வேலைநிறுத்தத்தை ஆரம்பிப்பதற்கு, முயற்சிகள் நடைபெறுவதாகத் தெரிகின்றது.

இந்தமுயற்சிக்கும், ரூபாய் 17-50 பஞ்சப்படிக்காக மாத்திரம் தோட்டத்தொழிலாளர் நடத்தும் வேலைநிறுத்தத்திற்கும் எவ்வகையான தொடர்பும் கிடையாது.

எதிர்க் கட்சிகள், தமது அரசியல் வேலைநிறுத்தத்தை இத் தருணத்தில் ஆரம்பிக்க முயற்சிப்பது, தோட்டத்தொழிலாளரைக் காட்டிக்கொடுக்கும் ஒரு நடவடிக்கையாகும்.

## "தமிழரசுக்கழக முடிவு அநீதியானது

### பிரதமரின் முகத்திலேயே அறைவதா?'

அரசியல் அவதானிகள் கருத்து

ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் நடத்திவரும் வேலைநிறுத்தத்தை ஆதரித்து இம்மாதம் 26ந் திகதி தாங்களும் வேலைநிறுத்தம் செய்வதென்று தமிழரசுக் கட்சித் தோட்டத் தொழிலாளர் யூனியனும் தொழிலாளர் கழகம் முடிவுசெய்திருப்பதை அரசியல் வட்டாரங்கள் வன்மையாகக் கண்டித்துள்ளன.

தொழிலாளர் கழகத்தின் இந்த நடவடிக்கை அநீதியானது. அரசாங்கத்தின் முகத்திலேயே அறைந்ததைப் போன்றது. என்று அரசியல்அவதானிகள் சிலர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

'வெண்ணெய் திரண்டுவரும் சமயம்...'

தமிழ்பேசும் மக்களின் உரிமைகளை வழங்குவதற்குத் தேசிய அரசாங்கப் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா விருப்பம் தெரிவித்திருக்கும் தருணத்தில் தமிழரசுக்கட்சியின் தோட்டத் தொழிலாளர் யூனியன் வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவதென்று செய்துள்ள முடிவு ...வெண்ணெய் திரண்டு வரும் சமயத்தில் தாழி உடைந்த கதையைப் போல அமைந்துவிட்டது என்று அரசியல் பார்வையா

(8-ம்பக்கம் பார்க்க)

## யாழ். பகுதியிலுள்ள உதவி பொலிஸ் அதிபர்

### சிறுவன் கொலை பற்றிய சாட்சியை அசட்டை செய்தாரா?

கொழும்பு, சனி

கொதபாயா கிர்ம்பகன்ட என்ற பத்து வயதுச் சிறுவனின் கொலைபற்றிய விசாரணையில் முக்கிய சாட்சியாகக் கருதப்படும் லோறன்ஸ் வானேர்ஸில் என்பவர் மீது போலிக் குற்றச்சாட்டு சுமத்தி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது பற்றி இப்பொழுது யாழ்ப்பாண மாவட்டத்தில் கடமையாற்றும் உதவி பொலிஸ் சுப்பிரிண்டன்ட் ஒருவருக்கு முன்னரே தெரிந்திருக்க வேண்டுமென்று பொலிஸார் கருதுகின்றனர்.

சிறுவனின் கொலை சம்பந்தமான விசாரணைகளில் தாம் ஒரு முக்கிய சாட்சியெனவானேர்ஸில்கூறியதை அச்சமயத்தில் கொழும்பு மாவட்டதில் உதவி பொலிஸ் சுப்ரின்டென்டனுகக் கடமையாற்றிய இவர் அசட்டைசெய்ததாக கொலைபற்றித் துப்புத்துலக்கி வரும் இரகசியப் பொலிசார் கருதுகின்றனர்

பிரஸ்தாப சாட்சிமீது போலிக்குற்றச்சாட்டு சுமத்தியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர், உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் மற்றும் மூன்று பொலிஸ் கான்ஸ்டபிள்கள் றிமான்டில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் இம்மாதம் 29ந்திகதி கொழும்பு தெற்கு நீதவான் முன் ஆஜர்செய்யப்படுவர்.

கொலைசெய்யப்பட்ட சிறுவனின் நெருங்கிய உறவினரொருவர் நேற்றும் தொடர்ந்து விசாரணைசெய்யப்பட்டார்.——

## "57 நாடுகளின் சுதந்திரத்திற்கு அமெரிக்காவே காரணம்"

### திரு ஹரிமன் கருத்து

கேம்பிரிட்ஜ், (மஸாசூசெட்ஸ்) ஜூன் 18

இந்தியாவுக்குச் சுதந்திரம் வழங்குமாறு, கடந்த 2-வது உலகயுத்தத்தின் போது அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த திரு. ரூஸ்வெல்ட், பிரிட்டிஷ் பிரதமர் திரு. வின்ஸ்டன் சர்ச்சிலை வற்புறுத்தியதாக திரு. அவரல் ஹரிமன் இங்கு கூறினார். திரு. ஹரிமன் ஜனாதிபதி ஜோன்ஸனின் உலகம் சுற்றும் ஸ்தானிகராவார்.

"ஆனால் சர்ச்சில் அப்போது இதற்குச் சாதமாக இருக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்" என்றார் ஹரிமன்.

"ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டின் செல்வாக்கும் பிலிப்பைன்ஸில் அமெரிக்காவின் உதாரணமும் 57 நாடுகளை காலனி ஆதிக்கத்திலிருந்து விடுவித்திருக்கிறது" என்றும் திரு. ஹரிமன் கூறினார்.

மாஸ்கோவிலும், லண்டனிலும் அமெரிக்க ஸ்தானிகராக இருந்த திரு. ஹரிமன் மேலும் பேசுகையில், அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கான அமெரிக்க உதவித்திட்டத்தை எதிர்ப்பவர்களைக்கண்டித்தார். இவ்வித உதவிமூலமே அமெரிக்காவின் தேசிய நலன்களைப் பாதுகாக்க முடியும் என்றும் அவர் கூறினார்.

(பி டி ஸி)

நோத் சிலோன் ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ் விற்பனைக்கு

நல்ல வியாபாரம் நடைபெறும் இரும்புக் கடை யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியிலுள்ள நோத் சிலோன் ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ் விற்பனைக்குண்டு. 485

## பிரதமர் கல்லோயா செல்வார்

பம்பலப்பிட்டி, சனி

பிரதமர் திரு டட்லி சேனநாயகா கல்முனையில் நடைபெறவிருக்கும் தமிழரசுக்கட்சியின் மகாநாட்டில் கலந்துகொள்வதற்கு முன் கல்லோயாவில் இருநாட்கள் தங்கியிருப்பார்.

இங்கு தங்கியிருக்கும்போது பிரதமர் அம்பாறையில் நடைபெறவிருக்கும் சில பொதுக்கூட்டங்களில் பேசுவாரென அறியப்படுகிறது.

## மகாநாட்டில் கலந்துகொள்வர்

சுழிபுரம், சனி

வட்டுக்கோட்டைத் தொகுதி தமிழரசுக் கட்சிக் கிளையினரும் வாலிப முன்னணியினரும் கல்முனையில் நடைபெறவிருக்கும் கட்சியின் 10-வது வருடாந்த மகாநாட்டில் கலந்துகொள்வதற்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்துவருகின்றனர்.

## திரு. ஸபார் பாக். வெளிமந்திரி?

ராவல்பிண்டி, ஜூன் 18

திரு ஸுல்பிகார் அலி பூட்டோவுக்குப் பதில் திரு. மொகமத் ஸபார் பாகிஸ்தான் வெளிநாட்டு மந்திரியாக நியமிக்கப்படக்கூடும் என ராவல்பிண்டியிலிருந்து கிடைத்துள்ள ராய்ட்டர் அறிவிப்பு கூறுகிறது.



தரமான கண் பரிசோதனை

அனஸ்கோ,

12, மெயின் வீதி, யாழ்ப்பாணம்.
(நூதனசாலைக்கு முன்பாக)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### வாடகைக்கு

வீடு

நல்ல வீடும் 10 பரப்பு வளவும் பல பிரயோசனங்களுடன் பிரதான இடங்களுக்கு மத்தியில்வாடகைக்கு உண்டு. நொ. 60 புங்கங்குளம் வீதி. விசாரணை: நொ 24, சுவாமியார் வீதி, கொழும்புத்துறை. 569

### விற்பனைக்கு

செயின் புளக்

2 1/2 தொன்நிறையுள்ள செயின் புளக் விற்பனைக்கு இருக்கிறது. விபரங்கட்கு குமாரசாமி, 83, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 570

### வைத்தியம்

தொய்வு, கசம் நீரிழிவு கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய சுற்றுலேகம் இலவசம். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணானந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### கல்வி

வகுப்புகள்

ஜீ. சி. ஈ. சாதாரணம், கலை / விஞ்ஞானம் / வர்த்தகம் ஆகியவற்றில் ஆகஸ்ட், டிசம்பர் பரீட்சைகளுக்கான வகுப்புகள் தற்போது ஆரம்பமாகியுள்ளன. தாமதமின்றி சேர்ந்துகொள்ளுங்கள். ஐக்கியகலாசாலை, 107, பருத்தித்துறைவீதி, நல்லூர் யாழ்ப்பாணம். 562

### குஞ்சம் கட்டுதல்

சேலைகளுக்கு குஞ்சம் கட்டுவதற்கு ரூ. 2-50 வி. பி. பி. மூலம் அனுப்பலாம். மா. மாரிமுத்து, 2-ம் வட்டாரம், புங்குடுதீவு மேற்கு. 571

REGAL—JAFFNA
NOW SHOWING!
See Rare Sights of the World!!
America by Night
(Scope Color)

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
சிவாஜி - சாவித்திரி
நடித்த
நவராத்திரி

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 7-45, 7-00, 9-30
போயா தினங்களில் 4 காட்சிகள்
YESTERDAY TODAY AND TOMORROW
(வயது வந்தவர்கட்கு மாத்திரம்)


# கிணறுகள் இடிந்து விழக் காரணமென்ன?

## ஆராயுமாறு அரசாங்க அதிபருக்கு கோரிக்கை

கிளிநொச்சி, வெள்ளி

அக்கராயன் குள நீர்ப்பாசன 2வது இணைப்புக்குழுக் கூட்டம் வன்னேரிக் குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் வேர்ணன் அபயசேகரா தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்துக்கு கிளிநொச்சிப் பாராளுமன்ற உறுப்பினர் கா. பொ. இரத்தினமும் இலாகா உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

சென்ற கூட்டத்தில்நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் படி எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை மாவட்ட காணி அதிகாரி எல்லோருக்கும் விளக்கிக் கூறினார்.

ஸ்கந்த புரத்துக்கு உபதபாற்கந்தோர் ஸ்தாபிக்கப்படவேண்டுமெனவும், வன்னேரிக் குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் ஆசிரியர் பற்றுக்குறையை நிவர்த்திசெய்ய வேண்டுமெனவும் முடிவு செய்யப்பட்டது.

அக்கராயன் குளம் இரண்டாம் பகுதி குடியேற்றவாசிகளுக்கு முன்போல அரசாங்கமே வீடு, கிணறு, கட்டிக் கொடுக்கவேண்டுமென வற்புறுத்தப்பட்டது.

வன்னேரிக்குள மக்கள் கட்டும் கிணறுகள் உடைந்து விழுவதற்கேற்ற காரணத்தை ஆராயும் பொருட்டு அரசாங்க அதிபர் வேண்டிய நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் முடிவு செய்யப்பட்டது.

இன்னும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

# அஞ்சல் எழுதுவினைஞர் தேசிய அரசாங்கத்திற்கு பாராட்டு

## புதிய ஊழியர் குறைகளை நீக்க கோரிக்கை

கொழும்பு, சனி

அஞ்சல் எழுதுவினைஞர் சங்க ஐந்தாவது ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் பின்வருவோர் நடப்புவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டர்.

தலைவர் திரு. வே. கனகசபை முதலி, துணைத்தலைவர் திரு. செ. அருச்சுனு, பொதுச் செயலாளர் திரு. த. சோமசுந்தரம், பொருளாளர் திரு. சி. இராசா, துணைப் பொருளாளர் திரு. ஆ. வீ. கனகரத்தினம். ஐவர் கொண்ட ஆட்சிக்குழு உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

கீழ்க்கண்ட தீர்மானங்கள் பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

'புதிய சேவை' அரசாங்க ஊழியர்கள் சிங்களத்தேர்ச்சியடையும் காலவரையை 1-7-63-ல் இருந்து மேலும் மூன்று வருட காலத்திற்கு இன்றையதேசியஅரசாங்கம் நீடித்திருப்பதால், 1-7-65 வரை வழங்கப்படாதுநிறுத்திவைக்கப்பட்டிருக்கும் 'புதிய சேவை' அரசாங்க ஊழியர்களின் ஊதிய உயர்வுகளை உடனடியாக மீட்டுக் கொடுக்கும்படி இன்றைய தேசிய அரசாங்கத்தை இச்சங்கம் கேட்டுக்கொள்கிறது.

பிற்போக்கு வாதிகளால் நாட்டில் ஏற்பட்ட இன, மத வேற்றுமைகளைக்களைந்து ஒரு தேசிய இன ஒற்றுமையை மிளிரச் செய்தமைக்கும் சிறப்பாக அரசாங்கஊழியர்களிடையே மீண்டும் சகோதர நல்லெண்ணத்தை ஏற்படுத்தியதற்கும் தேசிய அரசாங்கத்தை இச்சபை பாராட்டித் தொடர்ந்து இப்பணியில் பூரணத்துவம் பெற இச்சபை ஆசிக்கிறது.

## அர்ச். அந்தோனியார் திருநாள்

யாழ்ப்பாணம், சனி

பாஷையூர் அர்ச். அந்தோனியார் திருநாள், பாஷையூர் கட்டளைக் குரவர் வண. பிதா கே. பி. சந்தியாப்பிள்ளை முகாமையின்கீழ் நடைபெற்றது. இவ்வருடாந்த உற்சவம் ஆனி மாதம் முதலாந்தேதி கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாயிற்று. அன்று முதல் தினமும் மாலையில் திவ்ய பலிபூசையுடனும், விசேஷ மாலை ஆராதனைகளுடனும் நடைபெற்றுவந்த நவநாட்களின் போது வண. பிதா பாவிலுப்பிள்ளை போதகராக இருந்து பிரசங்கங்களை நிகழ்த்தினர்.

## பொலிஸ் பாதுகாப்பில் லொறி

யாழ்ப்பாணம், ஞாயிறு

வவனியாவிலிருந்து 1500 ரூபா பெறுமதியான மரங்களை ஏற்றிவந்த லொறி ஒன்றை ஆனைக்கோட்டைப் பொலிஸார் பொலிஸ்பாதுகாப்பில் வைத்துள்ளனர்.

இந்த மரங்களுக்கு இருவர் உரிமை கோரியதன் விளைவாகவே பொலிஸார் லொறியைப் பாதுகாப்பில் வைத்துள்ளனர். இதுசம்பந்தமாகப் பொலிஸார் மேலும் புலன்விசாரணை [illegible]

## திருக்கேதீச்சர சங்காபிஷேகம்

மன்னார், சனி

இவ்வருட திருக்கேதீச்சர ஆலய மகா சங்காபிஷேக விழா ஜுலை மாதம் 6-ந் திகதி புதன்கிழமை நடைபெறவிருக்கிறது.

கௌரி அம்பாள் சமேத திருக்கேதீச்சர நாதருக்கு அன்று பகல் மகா சங்காபிஷேகமும், விசேட பூசையும் அடியார்களுக்கு அன்னதானமும், மாலை தேவார பாராயணமும் சைவப் பிரசங்கங்களும் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது.

கொழும்பு 5-ம் குறுக்குத் தெரு வர்த்தகர் திரு க. செல்லத்துரையின் உபயமாக இச்சங்காபிஷேகவிழா நடைபெறும்.


கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (அம்பாறை) ஸ்ரீகிருஷ்ணு (திருக்கோணமலை)
விஜிதா (ஹட்டன்) கல்யாணி (நாவலப்பிட்டி) மொடேர்ன் (பதுளை)
தீவொளி (நுவரேலியா)



எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
நம்பியார், அசோகன், நாகேஷ்
பண்டரிபாய், சகஸ்ரநாமம்
மற்றும் பலர் நடித்த
சத்தியாமூவிஸ்
தெய்வத்தாய்


# தமிழரசுக் கட்சி கிளை உத்தியோகஸ்தர்கள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

கோப்பாய் தொகுதியிலுள்ள தமிழரசுக்கட்சிக் கிளைகளின் கூட்டம் கோப்பாய் எம். பி. திரு. கதிரவேற்பிள்ளை தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் புதுவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

**அச்சுவேலி**

தலைவர்: இ. வே. இராமசாமி, செயலாயர்: நா. நாகலிங்கம், பொருளாளர்: க. சின்னத்தம்பி.

**ஆவரங்கால்**

தலைவர்: க. சின்னத்துரை செயலாளர்: வெ. கணபதிப்பிள்ளை, பொருளாளர்: ஆ. சின்னத்துரை.

**புத்தூர்**

தலைவர்: சி. சங்கரப்பிள்ளை, செயலாளர்: க. பசுபதி, பொருளாளர்: சு. சதாசிவம்

**வாதரவத்தை**

தலைவர்: த. கந்தசாமி, செயலாளர்: செ. கிருஷ்ணபிள்ளை, பொருளாளர்: ஐ. சின்னராசா.

**வடகோப்பாய்**

தலைவர்: சு. நாகலிங்கம், செயலாளர்: சி. தி. அரசபிள்ளை, பொருளாளர்: மா. [illegible]தயா.

**கோப்பாய் தெற்கு இருபாலை**

தலைவர்: அ. உலகநாதன், செயலாளர்: பெ. கணேசலிங்கம், பொருளாளர்: சு. நகுலேசுவரர்.

**உரும்பராய்**

தலைவர்: வ. நடேசலிங்கம் செயலாளர்: க. விமலநாதன், பொருளாளர்: ச. கனகராசா.

**வசாவிளான்**

தலைவர்: இ. கனகலிங்கம், செயலாளர்; சூ. துரைராசா, பொருளாளர்: இ. கதிர்காமநாதன்.

கோப்பாய் தொகுதியைச் சேர்ந்த 13 கிளைகளின் நிர்வாகசபை அங்கத்தவர்களும் சென்ற 15-ம் திகதி கோப்பாய் எம். பி. தலைமையில் கூடி மாவட்டக்கிளை அமைத்தனர். தெரிவின் விபரம் வருமாறு: தலைவர்: சு. நாகலிங்கம், (கோப்பாய் வடக்கு கிளைத்தலைவர்) செயலாளர்: க. சின்னத்துரை, (ஆவரங்கால் கிளைத் தலைவர்) தனாதிகாரி: சி. சங்கரப்பிள்ளை, (புத்தூர்கிளைத் தலைவர்) மற்றும் பத்துக் கிளைகளின் தலைவர்களும் நிர்வாகசபை அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.


## விளம்பரம்

### ஊர்காவற்றுறைப் பட்டினசபை

### கேள்வி விளம்பரம்

1966-ம் ஆண்டு ஆனி மாதம் 23-ந் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்குபின்வரும் வேலைக்கு கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

1 சண்முகநாதன் வீதி பெருந் திருத்தவேலை. 1300 அடி நீளம்.

மற்றும் விபரங்களை ஊர்காவற்றுறைப் பட்டினசபைக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வே. சிவசம்பு,
தலைவர்
ஊர்காவற்றுறைப் பட்டினசபை. 608


## தொடர்ந்து விசாரணை நடைபெறுகிறது

கொழும்பு, சனி

தெஹிவளையைச் சேர்ந்த கோதபயா கிரம்பகந்தாவின் மர்மக்கொலை சம்பந்தமாக அவரின் சிறிய தகப்பன் இரகசியப் பொலிஸாரால் விசாரணைசெய்யப்பட்டுவருகிறார். இறந்த பையனின் இன்சூரன்ஸ் பொலிஸி எடுத்தது பற்றியும், பையன் இறந்ததால் இதனால் யார் பயனடைய முடியுமென்பது சம்பந்தமாகவும் ரகசியப் பொலிஸார் தற்பொழுது விசாரணை செய்துவருகின்றனர்.

## 'கடமையையும் உணரவேண்டும்'

வெனப்புவா, சனி

'அரசாங்க ஊழியர்கள் தங்கள் உரிமைகளுக்காகப் போராடுமுன்னர் தங்கள் கடமைகளை செய்யவேண்டும். ஜனநாயக ஆட்சிமுறையைக்கொண்ட ஒருநாட்டில் அரசாங்கத்தின் நிர்வாகம் அரசாங்கஊழியர்களிலேயே தங்கியுள்ளது' என்று சபாநாயகர் சேர் அல்பேர்ட் பீரிஸ் கிராமசேவையாளரின் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் பேசும்பொழுது குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

புதிய மாணவர்களுக்கு

# சீனபல்கலைக்கழகங்கள் 6 மாதம் கதவடைப்பு

## 'பூஷுவா' சக்தியைக்களைய புதிய கல்வி சீர்திருத்தம் ஏற்படும்

### சதி முயற்சியில் ஈடுபட்டதாக ஒரு அதிகாரி சுடப்பட்டார்

பீகிங், ஜூன் 18

சீனாவில் பல்கலைக்கழகங்களிலும், உயர் கல்விக்கழகங்களிலும் மாணவர்களைச் சேர்ப்பது 6 மாதங்களுக்கு நிறுத்தப்பட்டிருக்கிறது. மாணவர்கள் பூஷுவா ஆதிக்கத்துக்கு உட்பட்டிருப்பதால், இதைத் தடுக்கும் நடவடிக்கையாக இந்த ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கிறதென அறிவிக்கப்பட்டுள்ளது.

கம்யூனிஸ்ட் கொள்கை மீது அதிருப்திகொண்டிருப்பதாகக் கருதப்படும் அதிகாரிகளுக்கெதிராகவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

சிக்கியாங் மாகாணத்தில் 39 வயதான சீன அதிகாரி ஒருவர் மாசேதுங்கின் கொள்கைக்கு மாருகச் சதி செய்ததாயும், அரசாங்க அதிகாரிகளைக் கொலை செய்யச் சதிசெய்ததாயும் குற்றஞ்சாட்டப்பட்டு, சுட்டுக்கொல்லப்பட்டார் என அறிவிக்கப்பட்டது.

பல பள்ளிக்கூடங்களிலும் பல்கலைக்கழகங்களிலும் பூஷுவா (முதலாளித்துவ) கருத்துக்கள் வேரூன்றியிருப்பதாக அதிகார பீடம் கூறியுள்ளது.

பல்கலைக்கழகங்களில் இளம் புரட்சியாளர்களையும், விவசாயிகளையும், சிப்பாய்களையும் அதிகமாகச் சேர்த்துக்கொள்ளும் வகையில் பல்கலைக்கழகக் கல்வித் திட்டம் முற்றாகத் திருத்தியமைக்கப்படவிருக்கிறதென்றும், இதற்கு அவகாசம் பெறுமுகமாகவே மாணவர்களைச் சேர்ப்பது 6 மாதம் ஒத்திவைக்கப்படுவதாயும் மேலும் அறிவிக்கப்பட்டது.

கல்வித்திட்டம் சீர்திருத்தியமைக்கப்படுவதுமட்டுமின்றி பூஷுவாசக்திகள் அகற்றப்படுமென்றும் தொடர்ந்து கூறப்பட்டது.

### 23 பேர் பலி 30 பேர் காணோம்

நியூயோர்க், ஜூன் 18

நியூயோர்க் துறை முகத்தில் இரு எண்ணெய்க் கப்பல்கள் மோதிக்கொண்டதின் விளைவாக மாண்டவர்களின் தொகை 23 ஆக உயர்ந்துள்ளது. 30 பேரைக் காணவில்லை. இதுசம்பந்தமாக 5 மணிநேரம் துறைமுகம் முடப்பட்டது.

### குருகோவிந்தர்

புதுடில்லி, ஜூன் 18

அடுத்த ஜனவரி மாதம் குருகோவிந்தசிங்கின் 300 வது ஜயந்தியை முன்னிட்டு அவரது நூல்கள் பல மொழிகளில் பெயர்க்கப்படவிருக்கிறது. தலைசிறந்த எழுத்தாளர்களிடம் இவ்வேலைகள் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

### பஸுடோவுக்கு சுதந்திரம்

லண்டன், ஜூன் 18

தென்னுபிரிக்காவிலுள்ள பிரிட்டிஷ் பராமரிப்புப் பிரதேசமான பஸுடோலந்துக்கு அக்டோபர் 4-ம் திகதி சுதந்திரம் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டது

### சூ

புக்காரஸ்ட், ஜூன் 18

சீனப் பிரதம மந்திரி திரு சூ-என் லாய் ருமேனிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் பிரதமர் ஆகியோருடன் பேச்சுக்கள் நடத்தினுர்.

மாஸ்கோ—பீகிங் பிளவு குறித்து பேச்சுக்கள் நடைபெற்றன.

சூ ஒரு வைபவத்தில் பேசிய போது ரஷ்ய 'திரிபுரவாதிகள்' மீது சாடினுர்.

திரு. சூ அல்பேனியாவுக்கும் விஜயம் செய்யவிருக்கிருர்.

### விசாரணை

லியப்போர்ல்ட்வில்லி, ஜூன் 18

முன்னுள் காங்கோ வெளிநாட்டு மந்திரி, ஜனுதிபதி மொட்டுவை கொலை செய்ய நடைபெற்றசதியில் சம்பந்தப்பட்டதாக இன்று விசாரணைக்கு நிறுத்தப்பட்டார்.

### வெளிநாடு விஜயம்

லண்டன், ஜூன் 18

பிரிட்டிஷ் வெளிநாட்டு மந்திரி திரு. ஸ்டுவார்ட் மலேஸியா இந்தோனேஷியா தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொள்ளவிருக்கிருர்.

## பூட்டோவின் பிரெஞ்சு பிரயாணம் ரத்து

### அவர் இல்லாத புதிய மந்திரி சபை விரைவில் வெளியாகும்

ராவல்பிண்டி, ஜூன் 18

பாகிஸ்தான் மந்திரிசபை திருத்தியமைக்கப்படுவது தவிர்க்க முடியாததாகிவிட்டதாக. புதிய மந்திரி சபை மாற்றங்கள் வெகு விரைவில் அறிவிக்கப்படும் என்றும், திரு. பூட்டோ அதில் இல்லாமல் போகலாமென்றும் ராய்ட்டர்செய்திகள் கூறுகின்றன

ஜனுதிபதி அயூப்புடன் திரு. பூட்டோ 45 நிமிடம் பேச்சு நடத்தியபின் இது பற்றிய வதந்திகள் தலைநகரில் பலமாக உலவ ஆரம்பித்துவிட்டன.

பிரெஞ்சு வெளிநாட்டு மந்திரியைச் சந்திக்கும் பொருட்டு பாரிஸ் செல்லவிருந்த பூட்டோவின் பிரயாணம் ரத்துச்செய்யப்பட்டிருக்கிறது.

கடந்த புதன்கிழமை சிகிச்சையின் பொருட்டு தாம் ஐரோப்பா செல்வதற்காக, மந்திரி சபையிலிருந்து விடுவிக்கும்படி திரு. பூட்டோ கோரினுர் என்றும், ஜனுதிபதி அயூப் இதை ஏற்றுக்கொண்டார் என்றும் செய்திகள் வந்தபோதிலும், அதிகாரபூர்வமாக ராஜினுமா அறிவிக்கப்படவில்லை.

பாகிஸ்தான், மேற்குநாடுகளுக்குச் சார்பான கொள்கையை மீண்டும் கடைப்பிடிக்க ஆரம்பித்தபின், சீன சார்புக்கொள்கையுடைய பூட்டோவுக்கு மந்திரிசபையில் நிர்ப்பந்தம் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

## பிரிவினை இயக்கத்தினருக்கு 10 ஆண்டு சிறைவாசம்

### இந்தியாவில் அவசரச்சட்டம்

புதுடில்லி, ஜூன் 18

இந்தியாவிலிருந்து பிரிந்துசெல்வதற்கு இயக்கம் நடத்துபவர்கள் மீது வழக்குத் தொடரவும், 10 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கவும் அவசரச்சட்டம் ஒன்று பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

தனிநபர்கள், அல்லது கோஷ்டிகள் பிரிந்து செல்லும் சட்டவிரோத நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் போதிய முகாந்திரம் இருக்கிறதா என்பதை அறியவும் விசாரணை மன்றம் ஒன்று நியமிக்கப்படும்.

எதிரிகளுக்கு உதவியளிப்பவர்கள், அல்லது ஆதரவளிப்பவர்கள், அல்லது ஒருமைப்பாட்டைக் குலைக்க முயல்பவர்கள், அல்லது அரசாங்கத்தை வீழ்த்தும் நோக்குடன் செயல் படுபவர்கள் ஆகியோர் மீது அபராதமும், 10 ஆண்டுச் சிறையும் விதிக்க அவசரச் சட்டம் வழி செய்யும். புதிய சட்டம் மிஸோக்கள், நாகர்கள், சீன ஆதரவாளர்கள், பிரிவினைகளை கோரும் அகாலிதளத்தினர் ஆகியோரைப் பாதிக்கும் எனக் கூறப்படுகிறது.

### வருடாந்த உற்சவம்

வரணி, சனி

வரணி சேவலப்பிட்டி கந்தசாமி கோவில் வருடாந்த உற்சவம் இம்மாதம் 21-ம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி ஜூலை மாதம் 1-ம் திகதி வெள்ளிக்கிழமை இரதோற்சவத்துடன் முடிவடையும். மறுநாள் தீர்த்த உற்சவமும் ஷண்முகார்ச்சனையும் இடம் பெறும்.

கோவில் அர்ச்சகர் பிரம்ம ஸ்ரீ இ. இராமலிங்க குருக்களும், பிரம்ம ஸ்ரீ த. இ. சுப்பிரமணியக் குருக்களும் விழாவை நடத்தி வைப்பார்கள்.

### ஒரு ராக்கெட்டில் 8 கிரகங்கள்

வாஷிங்டன், ஜூன் 18

கேப்கென்னடி முனையில் இருந்து அமெரிக்கா ஒரு ராக்கெட் மூலம் 8 வான் மதிகளை எய்தது. இவற்றின் மூலம் வாஷிங்டனுக்கும் உலகெங்குமுள்ள அமெரிக்க படைகளுக்குமிடையே நேரடித்தொடர்பு ஏற்படும் என அறிவிக்கப்பட்டது.

## கி. பாக். துப்பாக்கிச் சூட்டுக்கு இருவர் பலி

டாக்கா, ஜூன் 18

கிழக்கு பாகிஸ்தானுக்கு மாகாண சுயாட்சி கோரி, நேற்று ஜெஷூரில் நடைபெற்ற ஊர்வலத்தைக் கலைக்க போலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 2 பேர் மாண்டனர். பலர் காயமடைந்தனர்.

இதுசம்பந்தமாக 3 நாள் "கறுப்புதினம்" அனுஷ்டிக்குமாறு கோரப்பட்டிருக்கிறது. ஜெஷூருக்கு ராணுவம் தருவிக்கப்பட்டது.

டாக்காவிலும் பொலிசார் சுட்டனர் என அறிவிக்கப்பட்டது. மேல்விவரங்கள் தெரியவில்லை.

பல ஜில்லாக்களில் ஆர்ப்பாட்டக்காரர்கள் கறுப்புப் பட்டிகளை அணிந்திருந்தார்கள் என்றும் வீடுகளில் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருப்பதாயும் அறிவிக்கப்பட்டது.

நேற்று பிரபல பத்திரிகையொன்றின் அச்சுக்கூடத்தை அரசாங்கம் எடுத்துக் கொண்டுவிட்டது. பிரசுரிப்பாளரும், ஆசிரியரும் கைது செய்யப்பட்டனர். ஆங்கில வாரப் பத்திரிகை ஒன்றும், வங்காள வாரப்பத்திரிகை ஒன்றும் நேற்று வெளியாகவில்லை

## ஆங்கிலோ-அமெரிக்கத்தலைவர்கள் வாஷிங்டனில் சந்திப்பர்

### அடுத்தமாதம் பேச்சுநடக்கும்

வாஷிங்டன், ஜூன் 18

அமெரிக்க ஜனுதிபதி ஜோன்ஸனைச் சந்திக்கும் பொருட்டு பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்சன் அடுத்தமாதம் வாஷிங்டன் வருவார் என அறிவிக்கப்பட்டது.

இவ்வித சந்திப்பு மிகவும் உபயோகமாய் இருக்கும் என ஆங்கிலோ-அமெரிக்க வட்டாரங்கள் கருதுகின்றன.

ஜூலை மாதப் பிற்பகுதியில் நடைபெறவிருக்கும் இப்பேச்சுக்களில் கிழக்கு-மேற்கு உறவு, தூரகிழக்கு பிரச்னைகள், நேட்டோ ஆகிய விஷயங்கள் விவாதிக்கப்படும்.

6 மாதங்களுக்கு முன் ஜோன்ஸன்-வில்சன் சந்திப்பு வாஷிங்டனில் இடம் பெற்றது. அதுமுதல் இதுவரை உலகப் பிரச்னைகள் குறித்து பிரிட்டிஷ் பிரதமர் அமெரிக்க ஜனுதிபதியுடன் தொடர்பு கொண்டிருப்பதாயும் மீண்டும் நேரடிச்சந்திப்பு அவசியம் எனக் கருதப்படுவதாயும் அறிவிக்கப்பட்டது. ஆஸ்திரேலியப்பிரதமர் திரு. ஹெரல்ட் இம்மாதம் வாஷிங்டனுக்கும் லண்டனுக்கும் சென்று ஜனுதிபதி ஜோன்ஸனையும், பிரதமர் வில்சனையும் சந்திக்கப் போவதாய் அறிவித்தார்.

## ஆயுட்கால ஜனுதிபதி சுகர்ணே

ஜாகர்த்தா, ஜூன் 18

லெப்டினண்ட் ஜெனரல் சுகர்ட்டோவை நிர்வாகத் தலைவராகவும், டாக்டர் சுகர்ணேவை ஏகதலைவராகவும் இந்தோனேஷிய பார்லிமெண்ட் அங்கீகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த மார்ச் 11-ம் திகதி ஜெனரல் சுகர்ட்டோவுக்கு ஜனுதிபதி சுகர்ணே வழங்கிய நிர்வாக அதிகாரத்தை ரத்துச் செய்ய முடியாது என்றும், அதேபோல் ஜனுதிபதி சுகர்ணேயின் ஆயுட்கால பதவியை ரத்துச் செய்ய பார்லிமெண்டுக்கு அதிகாரம் இல்லையென்றும் கூறப்படுகிறது.

இந்தோனேஷியாவில் பொதுத் தேர்தல் ஒன்றை துரிதமாக தயார்செய்ய [illegible] புதிய தலைவர்கள் ஈடுபட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

நாம் கடவுளுக்கு ஆட்பட்டு கீழ்ப்படிந்து நடக்கத் துணிந்துவிட்டால், அவர் தன் அளவு கடந்த சக்தியால் வெகு தூரத்திலுள்ள நட்சத்திரத்தையும், மணலையும் கூட நமக்கு உதவப் பணிப்பார்.

—ஆஸ்வால்ட்சேம்பர்ஸ்.

ஈழநாடு

EELANADU National Tamil Daily. Post Box 49 JAFFNA.
Telegrams : EELANADU Jaffna. Telephone : 389

பராபவ ஆ ஆனி மீ 5 (19-6-66)

# விவேகமற்ற முடிவு

தோட்டத் தொழிலாளருக்கும் 17 ரூபா 50 சதம் விசேஷ பஞ்சப்படி வழங்கப்பட வேண்டுமெனக் கோரி ஜனநாயகத்தொழிலாளர் காங்கிரஸ் நடத்திவரும் வேலை நிறுத்தத்துக்கு ஆதரவளிப்பதென்றும் அதன் பொருட்டு இம்மாதம் 21-ந் திகதி முதல் வேலை நிறுத்தம் செய்வதென்றும் தமிழரசுக்கட்சியின் ஆதரவிலுள்ள இலங்கைத் தொழிலாளர் கழகம் செய்துள்ள முடிவு சமய சந்தர்ப்பமற்றதுடன் விவேகமற்றதும் நியாயமற்றதுமாகும்.

தமிழரசுக்கட்சியின்பத்தாவது தேசிய மகாநாடு இம்மாதம் 23-ந் திகதி தொடக்கம் 25-ந் திகதி வரை கல்முனையில் நடைபெறவிருக்கிறது. இந்த மகாநாட்டில் கலந்துகொள்ள வேண்டுமென்று பிரதமரையும் ராஜாங்க மந்திரியையும் தமிழரசுக் கட்சி அழைத்திருக்கிறது. இந்த அழைப்பை அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கின்றனர். தமிழரசு மகாநாட்டுக்குபிரதமர்செல்லவிருப்பதை எதிர்க்கட்சியினரும் எதிர்க்கட்சிப்பத்திரிகைகளும் சிங்களப் பொதுமக்கள் மத்தியில் தவறான கருத்தை ஏற்படுத்தக்கூடிய முறையில் பிரசாரம் செய்வதுடன் பிரதமரை தமிழரசு மகாநாட்டுச்குச் செல்லாமல் தடுப்பதற்கும் முயற்சி செய்கின்றன. இதைப்பிரதமரும், ஸ்தலஸ்தாபன அமைச்சரும் தமிழரசுக் கட்சித்தலைவர்களில் ஒருவருவான திரு. திருச்செல்வமும் உணர்ந்துள்ளனர். 'எவர் என்ன தான் முயற்சி செய்தாலும் தமிழரசுக்கட்சியின்மகாநாட்டில் கலந்துகொள்வேன்' என்று பிரதமர் உறுதியாகத் தெரிவித்துள்ளார். இச்சமயத்தில் வேலை நிறுத்தத்தில் கலந்துகொள்வதென்று தமிழரசுக் கட்சியின்ஆதரவிலும் கட்டுப்பாட்டின் கீழும் உள்ள இலங்கைத்தொழிலாளர் கழகம் முடிவு செய்திருப்பது பிரதமரின் முதுகில் குத்துவது போன்றதாகும்.

தோட்டத் தொழிலாளரின் ஆதரவைப் பெறவும் தனது தொழிற்சங்கத்தைப் பலப்படுத்தவும் தொழிலாளர் கழகம் இத்தகைய தீர்மானத்துக்கு வந்திருக்கலாம்; தொழிலாளர் கழகம் வேலைநிறுத்தம் செய்வதால் பெரும் மாறுதல் எதுவும் ஏற்படாதென அது கருதியிருக்கலாம்; அரசாங்கத்துடன் தமிழரசுக்கட்சி ஒத்துழைத்தாலும் அது தனது உரிமைகளையோ, தனித்தன்மையையோ விட்டுக்கொடுக்கமாட்டாது என்பதை உணர்த்துவதற்காக தொழிலாளர் கழகம் இந்த முடிவைச் செய்திருக்கலாம். என்றாலும் சமய சந்தர்ப்பம் தெரியாது, விவேகமற்றமுறையில் அது நடந்துகொண்டிருக்கிறதென்பதை மறுக்க முடியாது காரணம் 25-ந் திகதி கல்முனையில் தமிழரசுக்கட்சியின் மகாநாடு கூடவிருக்கிறது; 25-ந் திகதி அந்த மகாநாட்டின் இறுதிநாள் நிகழ்ச்சியான பொதுக்கூட்டம் நடைபெறவிருககிறது. இதில்பிரதமர்பேசுவதற்கு ஒப்புக்கொண்டிருக்கிறார். இதற்கு முன்னர் அதாவது 21-ந்திகதி தொழிலாளர் கழகம் வேலைநிறுத்தம் செய்வது எப்படி நியாயமாகும்?

தேசிய அரசாங்கத்தில் பல்வேறு சமூகத்தினரும் அரசியல் கட்சிகளும் அங்கம் வகிக்கின்றனர். ஒவ்வொன்றும் தத்தமது கோரிக்கைகளுக்காகவும் நியாயமான கோரிக்கைகளுக்காக இதர ஸ்தாபனங்கள் நடத்தும் வேலை நிறுத்தங்களுக்கு ஆதரவு தெரிவித்தும் வேலை நிறுத்தம் செய்தால் அதன் முடிவு என்ன? தேசிய ஐக்கியத்தை உருவாக்குவதற்கு உருவான தேசிய அரசாங்கத்தை சங்கடத்துக்குள்ளாக்குவது சரியல்ல. தொழிலாளர் கழகம் தனது முடிவை மாற்றிக்கொள்ள வேண்டும். அல்லது தமிழரசுக்கட்சி தொழிலாளர் கழகத்துக்கு நற்புத்தி புகட்ட வேண்டும்.

# பிரதமரும் பத்திரிகைகளும்

ஐக்கிய தேசியக்கட்சியின் வாலிபர் மகாநாட்டில் பிரதமர் பேசுகையில் பத்திரிகைகளை வன்மையாகக் கண்டித்திருக்கிறார். அரசாங்கமும் சில அமைச்சர்களும் எடுத்த சில நடவடிக்கைகளை பத்திரிகைகள் கண்டித்ததற்காக பிரதம பத்திரிகைகளைக் கண்டித்திருக்கிறார். இது கவலைக்குரிய விஷயம்

பத்திரிகைகள் எல்லாம் நியாயமாக நடந்துகொள்கின்றன என்றோ ஆக்கபூர்வமான கண்டனம் தெரிவிக்கின்றன என்றோ சொல்லமுடியாது பத்திரிகைகள் கண்டிக்கின்றன என்பதற்காக பிரதமரும் அமைச்சர்களும் பத்திரிகைகளைக் கண்டிப்பது நல்லதல்ல. பத்திரிகைகள் பொதுவாக மக்களின் கருத்தைப் பிரதிபலிப்பவை. மக்களுக்கும் அரசாங்கத்துக்குமிடையில் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தும் பொறுப்பு பத்திரிகைகளையே பெரிதும் சார்ந்திருக்கின்றது. ஜனநாயகம் நிலைபெறுவதற்குப் பத்திரிகைச் சுதந்திரம் எவ்வளவு அவசியமோ அவ்வளவு பத்திரிகைகளுக்கும் அரசாங்கத்துக்கும் ஒத்துழைப்பு இருக்கவேண்டியதும் அவசியம்.

'பத்திரிகைகள்தான் யு.என்.பி.யை ஆட்சிக்குக் கொண்டு வந்தன அவை எனஎண்ணிக் கொண்டிருக்கின்றன ஆனல் உரிமைகளை இழந்து நசுக்கப்படவிருந்த பத்திரிகைகளைக் காப்பாற்றியது யு. என். பி. என்பதை இவர்கள் உணரவேண்டும்' என்று பிரதமர் ஆத்திரத்துடன் கூறியிருப்பது 'நெய்க்குத் தொன்னை ஆதாரமா, தொன்னைக்கு நெய் ஆதாரமா?" என்பதைப்போன்றிருக்கிறது.

சில தினங்களுக்குமுன் நாம் இதே பத்தியில்குறிப்பிட்டதுபோல, பத்திரிகைகளை முன்னைய பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயகா தனது பகையாகக் கருதியதும், இன்றையபிரதமர்பத்திரிகைகளைத் தனது நெருங்கிய நண்பர்களாக நினைத்திருந்தார். முன்னையபிரதமர் பத்திரிகைப் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசுவதையே வெறுத்தார். இன்றைய பிரதமர் பத்திரிகைப் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசுவது அவசியமில்லை எனக் கருதினார்.

இந்த நிலை மாறவேண்டும். பத்திரிகைப் பிரதிநிதிகளைப் பிரதமர் அடிக்கடி மகாநாடு கூட்டிச் சந்தித்து அரசாங்கத்தின் திட்டங்களையும் நோக்கங்களையும் விளக்கவேண்டும். இச்சந்திப்புக்களின் மூலம் அரசாங்கம் தனது தவறுகளைத் திருத்திக்கொள்ளவும் பத்திரிகைகள் தமது தவறுகளை உணர்ந்து கொள்ளவும் வாய்ப்பு ஏற்படும். வாராவாரம் பத்திரிகைப் பிரதிநிதிகள் மகாநாட்டை பிரதமர் [illegible] பிரதமர் இதைச்செய்வாரென நம்புகிறோம்.

## "ஈழத்துக்குப்பெருமை தேடித்தந்தவர்

உடுப்பிட்டி, சனி

"உலகம் பெரியோர்களை ஈர்ந்ததினாலேயேபெருமையடைகிறது. ஒரு நாட்டின் சிறப்பும், வளர்ச்சியும் அந்நாட்டின் அறிஞர் பெருமக்களிலேதான் தங்கியுள்ளது. எம் ஈழ நாட்டிற்குபெருமை தேடித் தந்தவர்களின் வரிசையில் தென்புலோலியூர் அறிஞர் கந்த முருகேசனுரா ஒருவராவர். கந்த முருகேசனரின் கருத்துக்கள் நன்கு ஊன்றிப் படித்தவர்கட்கு முரண்பாடுஉள்ளவையாகத்தோன்றலாம். ஆனல் அவரின் கருத்துக்களை நன்கு ஆராய்ந்து பார்ப்போமாகில் ஒரு சிறந்த அறிவுக் களஞ்சியம் பெறற அதிர்ஷ்டசாலிகளாவோம்".

மேற்கண்டவாறு வித்துவான் க. வேந்தனார் புற்றளை சாரதா பீட வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்ற தென்புலோலியூர் புலவர் கந்த முருகேசனரவர்களின் ஆண்டுநிறைவு விழாவில் பேசுகையில் கூறினார். பண்டிதர் பொன். கிருஷ்ணபிள்ளை தலைமை வகித்தார். திரு. க. வேந்தனார் மேலும் பேசுகையில்; 'நல்லறிஞர்களுடன் கலந்துரையாடுவதால்உள்ளம்தூய்மையடைகிறது என்றும் இப்பாக்கியத்தை நான் எனது வாழ் நாளிலேயே முருகேசனரவர்களுடன் சிறிதுநேரம் சம்பாஷித்தபொழுது அடைந்து விட்டேன்' என்றும் கூறினர்.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் ஆசிச் செய்தி வாசிக்கப்பட்டது. வித்துவான் க. கார்த்திகேசு, பண்டிதர் வீ. பரந்தாமன், திருவாளர்கள் செ. சுந்தரம் பிள்ளை, க. பொன்னையா, செ. ஆழ்வாப்பிள்ளை. திருமதி மாலோகமணி மற்றும் பலரும் பேசினர்,

கருணையம்பதி இளைஞர் கழகத்தின் 'பேய்வீடு' என்னும் நாடகமும் நடைபெற்றது.

ஊர்காவற்றுறை, சனி

ஊர்காவற்றுறையில் இருந்து 3 மைல் தூரத்தில் உள்ள ஊருண்டி என்னும் குறிச்சியில் தபாற்பெட்டி அமைக்கவேண்டும் என நாரந்தனைக் கிராமசபை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

## உதவி மந்திரியை பேட்டி காண்பர்

பம்பலப்பிட்டி, சனி

பெண்களும், சிறுவர்களும் மதுபானக் கடைக்குச் செல்வதைத் தடைசெய்ய சட்டமூலம் நடவடிக்கை எடுக்குமாறு ஸ்தலஸ்தாபன உதவி மந்திரி திரு. பிரேமதாசாவைப் பேட்டி காண்பதென அகில இலங்கை அருந்ததியர் சங்கச் செயற்குழுக் கூட்டத்தில் முடிவுசெய்யப் பட்டது. இது சம்பந்தமாக வண. தேவமெலட்டாவ அமரவன்ச தேரோவையும் பேட்டி காண்பதென முடிவு செய்யப்பட்டது. கூட்டத்துக்கு திரு. மா. பெ. பாரதி தலைமைவகித்தார். திருமலையில் 22 வீடுகள் தீக்கிரையாகியதால் பாதிக்கப்பட்ட தொழிலாளருக்கு சங்க மூலம் நிதிசேகரித்து அனுப்புவதெனவும் முடிவுசெய்யப்பட்டது.

## கடற்படை உத்தியோகத்தர் தகாதமுறையில் நடந்தாராம்

ஊர்காவற்றுறை, சனி

காரைநகர் கடற்படை இலாகாவைச் சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவர் ஊர்காவற்றுறையில் மண்குழி என்னுமிடத்தில் உள்ள ஒரு வீட்டில் அத்துமீறிப் பிரவேசித்ததாகவும், அங்குள்ள இளம் பெண்ணிடம் பலாத்காரம்செய்ய முயற்சித்ததாகவும், அவ்வேளையில் பெண்ணின் தகப்பனும், மற்றும் பெண்களும் தடியாலும், பொல்லாலும் அந்தக் கடற்படை உத்தியோகத்தரைத் தாக்கியதாகவும் அறியப்படுகிறது.

இதுசம்பந்தமாகப் பெண்ணின் தந்தை ஊர்காவற்றுறைப் பொலிஸில் புகார் செய்துள்ளார்.

## தமிழ் இந்து பல்கலைக்கழகம் வேண்டும்

பம்பலப்பிட்டி, சனி

இலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்கும், இந்துக்களுக்கும் எல்லா உறுப்புகளும் நிறைந்த ஒரு சிறந்த பல்கலைக்கழகம் அவசியமானதென்றும் அப்படியான பல்கலைக்கழகம் ஒன்றை விரைவில் உருவாக்கக்கூடியளவு பெருந்தொகையான மக்களின் ஆதரவுபெற முயற்சிகள் எடுக்கப்படவேண்டுமென்றும் கொழும்பு விவேகானந்த சபை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

இதுசம்பந்தமாக வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கச் சபைத்தலைவர் திரு. மு. வயிரவப்பிள்ளையையும், சுகாதார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. கு. பாலசிங்கத்தையும் சபை நியமித்துள்ளது.

## கமக்காரர் கஷ்டம்

நெடுந்தீவு, சனி

குடியேற்றத் திட்டத்தில் காணிகள் பெற்றுள்ள கமக்காரர்கள் தங்கள் எருது மாடுகளை உழுவதற்கு நெடுந்தீவில் இருந்து தங்கள் கமங்களுக்கு கொண்டுபோக முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அண்மையில் இங்கு நடந்தமாட்டுநோய் காரணமாக மிருக வைத்தியப் பகுதி இங்கிருந்து ஆடு, மாடுகள் ஏற்றுமதி செய்யக் கூடாதென்று தடைவிதித்திருந்தது. இத்தடையை நீக்கும் வண்ணம் பலர் அதிகாரிகளைக் கேட்டிருந்தும் இதுவரை ஒருவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரியவருகிறது.

## நாடும் நடப்பும்

'பீரிஸ்' - இந்தப் பெயர் இப்பொழுது பிரபல்யம் பெற்றுள்ளது. ஜவுளிவர்த்தகர்களுக்கு இந்தப் பெயரைச் சொன்னாலே பல்லை நறநறவென்று (இராமாயணத்தில் வருகிறமாதிரி) கடிப்பார்கள்! பொதுமக்களில் பலர் ('கியூ'வில் கால் கடுக்க நின்று பலதடவைகளில் ஏமாறியவர்கள் அல்ல) இந்தப் பெயரை தேன் சொட்ட உச்சரிக்கின்றனர்.

ஆமாம், வர்த்தக அமைச்சரின் பெயரும், உதவி வர்த்தக அமைச்சரின் பெயரும் பீரிஸ்தான்! வர்த்தக அமைச்சர் டாக்டர் எம். வி. பி. பீரிஸ், உதவிவர்த்தகஅமைச்சர் திரு. எஸ். ஏ. பீரிஸ்.

இந்த இரண்டு பீரிஸ்களும் ஜவுளிவிலைக்கட்டுப்பாட்டுத்திட்டம் சம்பந்தமாக எடுத்துவரும் உறுதியான நடவடிக்கைகள், (அவற்றில் சில தவறுகள் இருந்தபோதிலும்) பலருக்கு ஆத்திரத்தைக் கிளப்பியுள்ளன; அவர்களின் பெயர்களை உச்சரித்தாலே அவை சிம்மசொப்பனமாக உள்ளன.

ஃ ஃ ஃ

பீரிஸ் என்பது பெயர் மட்டுமல்ல. எங்கள் வீடுகளில் பீலிஸ்கோப்பை என்று சொல்கிறோமே அதை சிங்கள மக்கள் தங்கள் வீடுகளில் ''பீரிஸ் கூட்டப'' என்று சொல்லுவார்களாம். இதை வைத்து சில பத்திரிகைகள் 'பீரிஸ் கூட்டம்' என்று நமது வர்த்தக அமைச்சர் டாக்டர் எம். வி, பி. பீரிசையும், உதவி அமைச்சர் எஸ். ஏ. பீரிசையும் சேர்த்துதமாஷ்பண்ணியிருக்கின்றன. தமிழில் ''ஜாடிக்கேற்ற மூடி'' என்று பழமொழி உண்டு அல்லவா அதுபோல் 'பீரிஸ்' கோப்பை, இரண்டும் ஒன்று தான் என்ற அர்த்தத்தில் அந்தப் பத்திரிகைகள் 'தமாஷ்' பண்ணியிருக்கின்றன!

இந்த தமாஷ் பற்றி நமது பிரதமர் யு. என். பி. வாலிபர்முன்னணி கூட்டத்தில் பேசுகையில் 'பீரிஸ்' களை கடைகளில் விலைகொடுத்து வாங்கிவிடலாம். ஆனல் எனது மந்திரிசபையிலுள்ள பீரிஸ்களை விலைகொடுத்து வாங்கமுடியாது'' என்று பிரதமர் கூறியிருக்கிறார். இதிலிருந்து அமைச்சர்கள் பீரிஸ்களை விலைகொடுத்து வாங்க முயற்சி செய்யப்பட்டன என்பது புலனாகிறது.

ஃ ஃ ஃ

புத்தூர், ஆவரங்கால் சிவ ஆலயங்களில் உற்சவங்கள் ஆரம்பமாகியிருக்கும் இச்சமயத்தில் புத்தூர் கிராமசபை 'பசுவதைசெய்வதற்கு அங்கீகாரம்' என்ற தலைப்பில் புத்தூர் கிராமசபை வரிஇறுப்பாளர் சங்கக் காரியதரிசி ஒரு துண்டுப் பிரசுரம் விடுத்துள்ளார். சைவசமயத்தவர் பெரும்பான்மையாக வாழும் புத்தூர் கிராமத்தில் மாட்டிறைச்சி விற்பதற்கு அனுமதியளிக்கவேண்டியது அவசியம் தானா? நாம் செய்த பாவங்கள் போதாதா? கிராமசபையினர் இதுவிஷயத்தில் விழிப்புடன் செயலாற்ற வேண்டும்.

—ஊர்சுற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோட்டப்பாடசாலைகளை அரசாங்கம் இவ்வருடத்துக்குள் கையேற்க வேண்டும்

## அரசாங்கக் குழு கூட்டத்துக்கு கிளிநொச்சி எம். பி. பிரேரணை

கொழும்பு, சனி

இவ்வருட இறுதிக்குள் தோட்டப் பாடசாலைகளை அரசாங்கம்மேற்கொள்ள வேண்டும் என்று கோரும் பிரேரணையொன்றை அரசாங்க பார்லிமெண்டரிக் குழுவில் கொண்டுவருவதற்கு கிளிநொச்சி எம். பி பண்டிதர் கா. பொ. இரத்தினம் முன்னறிவித்தல் கொடுத்துள்ளார். இம்மாதம் இருபத்தோராம் திகதி நடைபெறும் அரசாங்க பார்லிமெண்டரிக் குழுக் கூட்டத்தில் இப் பிரேரணை விவாதிக்கப் பட வேண்டுமென்று இவர் கோரியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில், நுண்கலைக் கல்லூரியின் கிளையொன்று திறக்கப்பட வேண்டுமென்றும் இக் கல்லூரியில் தமிழ் மொழியில் பயிற்சி வகுப்புகள் நடைபெறவேண்டும் என்றும் கோரும் மற்றுமொரு பிரேரணைக்கான முன்னறிவித்தலையும் பண்டிதர் கா. பொ. இரத்தினம் தாக்கல் செய்துள்ளார்.

### ஆங்கிலம் போதனுமொழி

வத்தேகம எம். பி. திரு. பி. பி. ஏ வீரக்கோன் பின்வரும் பிரேரணைக்கான முன்னறிவித்தலை தாக்கல் செய்துள்ளார்.

பல்கலைக்கழகங்களிலும் கல்லூரிகளில் உயர் வகுப்புகளிலும் பயிலும் விஞ்ஞான மாணவர்களுக்கு ஆங்கிலத்தையே போதனு மொழியாக்க வேண்டும். விஞ்ஞானத்தை சிங்கள மொழியில் போதிப்பதற்கு போதுமான தரமான பாடப் புத்தகங்களோ அல்லது ஆசிரியர்களோ இல்லாததால் மேலும் சில காலத்துக்கு உயர் வகுப்புகளில் போதனு மொழி ஆங்கிலமாகவே இருக்க வேண்டும்.

---

## படித்த வாலிபருக்கு அரசாங்கக் காணி

கிளிநொச்சி, சனி.

இரணைமடு பிரதான வாய்க்கால். ஆற்றுக் காணிக்கு படித்த வாலிபர்களை தெரிவுசெய்யும் காணிக்கச்சேரி கிளிநொச்சி காணிக் கந்தோரில் நடைபெற்றது. கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் இதில் பங்குபற்றினுர்

கிளிநொச்சித் தொகுதியில் இருந்து 100 படித்த வாலிபர்கள் தெரிவுசெய்யப்படுவர். தெரிவுசெய்யப்பட்ட வாலிபர்களுக்கு 2 ஏக்கர் வீதம் மேட்டுக் காணி வழங்கப்படும். கிடைக்கும் காணியை திருத்துவதற்கும் வீடு. கிணறு கட்டுவதற்கும் ஏக்கருக்கு ரூபா 5000/-வரையில் அரசாங்கத்தால் செலவிடப்படும். இத் திட்டத்தில் உபஉணவுப்பொருள் விளைவிக்கப்படும்.

தொடர்ந்து இக்காணிக்கு இளைஞர்களை தெரிவுசெய்யும் காணிக்கச்சேரி இம்மாதம் 18-ம் 23-ந் திகதிகளில் நடைபெறும் சுமார் 700 வாலிபர்கள் இக் காணிக்கச்சேரியில் காணி பெற விண்ணப்பித்துள்ளனர்எனத் தெரியவருகிறது,

---

## சிரமதானம்

கோண்டாவில், சனி

கோண்டாவில் — இணுவில் காரைக்கால் சிவன் கோவில் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு கோண்டாவில்—இணுவில் இந்து வாலிபர் சங்கமும், இணுவில் தேசிய விவசாயிகள் கழகமும் சிரமதானஇயக்க மூலம் கோவில் முகாமையாளரும் இந்து வாலிபர் சங்கத் தலைவருமான திரு. க அம்பலவாணர் தலைமையில்நேற்று வீதிகளைத் திருத்தும் பணியில் ஈடுபட்டனர்.

## இசைவிழா

உடுப்பிட்டி, சனி

பருத்தித்துறை தமிழிசைச்சங்கத்தின் ஐந்தாவது ஆண்டு இசைவிழா சென்ற புதன்கிழமை ஆரம்பமாகியது திரு. ஆர். மூர்த்தி ஐயர் தீபமேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார். பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திரு. எம் எம். அப்துல்காதர் தலைமையில் நடைபெற்ற முதல்நாள் நிகழ்ச்சிகளில் செல்விகள் இந்திரா நடராசா, பிராணேஸ்வரி, க தங்கராணி, எஸ். இரத்தினம், திரு. கே. ஆர். என். ராஜா ஆகியோரின் பாட்டுக்கச்சேரியும் நடைபெற்றன.

இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் வடமராட்சிக்காரியாதிகாரி திரு. அ. க. விஸ்வநாதன் தலைமையில் நடைபெற்றது. திருவாளர்கள் ரி. இராசலிங்கம், ரி பாலசுந்தரம், பரம். தில்லைராசா, சாம்பசிவம், அருளானந்தம், துரைராசா, திருமதி சரஸ்வதி பாக்கியராசா ஆகியோரின் பாட்டுக்கச்சேரியும், செல்வி மாதுரிதேவி கந்தப்புவின் கரக நடனமும் நடைபெற்றன.

---

## ஆசிரியருக்குப் பாராட்டு

யாழ்ப்பாணம், ஞாயிறு

கந்தரோடை தமிழ் வித்தியாசாலையில் நாற்பது ஆண்டுகளாகத் தலைமை ஆசிரியராகக் கடமையாற்றி இளைப்பாறிய பிரம்மஸ்ரீ சு. சிவசுப்பிரமணிய ஐயருக்கு பாடசாலை ஆசிரியர்களும், மாணவர்களும் முன்னுள்பாடசாலைமுகாமையாளர் திரு. சி. மு அப்புத்துரை தலைமையில் நலம் பாராட்டுவிழா ஒன்றை நடத்தினர்.

திரு. அப்புத்துரை தலைமையுரையில் மேற்படி ஆசிரியர் பாடசாலையின் முன்னேற்றத்திற்காகப் பெரிதும் உழைத்தவரென்றும் அதனுல் அவர் எல்லோரின் மதிப்பையும் பெற்றுள்ளாரென்றும் குறிப்பிட்டார்.

---

## உடுகம

லண்டன், ஜூன் 18

கடந்த பெப்ரவரி மாதம் 17-ந் திகதி தோற்கடிக்கப்பட்ட [illegible] புரட்சிச்சதிமுயற்சி சம்பந்தமாக இலங்கை இராணுவத் தளபதி கேர்ணல் றிச்சார்ட் உடுகமவைச் சந்தித்து விசாரணைகள் நடத்துவதற்காக இங்கு வந்திருக்கும் பொலிஸ் சுப்பிரண்டன்ட்திரு. ஜி. டி. ஈ ஏ செனிவரத்ன நேற்றுவரை உடுகமவைச் சந்திக்கவில்லையென்றும் ஆனுல் அடுத்த மூன்று தினங்களுக்குள் அவரைச் சந்திக்கலாம் என்றும் கூறப்பட்டது.

லண்டனில் தமது சகோதரருடன் தங்கியிருக்கும் திரு. செனிவரத்ன பத்துத் தினங்கள் வரை இங்கிருப்பார் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

## பீடிப் புகையிலைக்கு பெரும் கிராக்கி

சுழிபுரம், சனி

இப்பகுதியிலுள்ள பீடிப் புகையிலைக்கு பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. தனிப் பட்டவியாபாரிகள் போட்டி போட்டு புகையிலையைவாங்குகிருர்கள். இரவு பகல் என்று பாராது மோட்டார் வாகனங்கள் மூலம் புகையிலை உடனுக்குடன்கொண்டு செல்லப்படுகின்றன. சங்கத்துக்கு கொடுப்பதிலும் பார்க்க அநேகர் புகையிலையை தனிப்பட்ட வியாபாரிகளுக்கே விற்றுவருகின்றனர்.

---

## பாடசாலைப் பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம், சனி

நல்லூர் தெற்கைச் சேர்ந்த 'நல்லூர் தெற்கு தமிழ் கலவன் பாடசாலை'யின் பெயரை விக்னேஸ்வரா வித்தியாலயம் என்று பெயர் மாற்றம் செய்யவேண்டும் என மேற்படி பாடசாலைப் பெற்ருர் ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் த. சோமசுந்தரத்தினுல் கொண்டுவரப் பட்ட பிரேரணை சமீபத்தில் கல்விப்பகுதியால் அங்கீகரிக்கபபட்டு 'விக்னேஸ்வரா வித்தியாசாலை' என்று பெயர் மாற்றம் செய்யப் பட்டுள்ளது.

---

## மருந்தகத்தில் திருட்டு

யாழ்ப்பாணம், ஞாயிறு

நேற்றிரவு யாழ்ப்பாண நகரின் மத்தியிலுள்ள ஒரு மருந்தகத்தில் மருந்துவகைகள் திருடப்பட்டிருக்கின்றன.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு அருகிலுள்ள மேற்படி மருந்தகத்தின் கூரையைப் பிரித்துத் திருடர்கள் மருந்துவகைகளைத் திருடியிருப்பதாகத் தெரிகின்றது. திருடப்பட்ட மருந்துவகைகளின் பெறுமதி எவ்வளவென்று தெரியவில்லை. பொலிஸார் புலன்விசாரணை நடத்துகிருர்கள்.

## இளைஞர் மன்றம் வெற்றி

கோண்டாவில், சனி

அனலைதீவு ஐயனுர் இளைஞர் மன்றக் கிரிக்கெட் கோஷ்டியினருக்கும் அனலை. கிழக்கு இளைஞர் முன்னேற்றக் கழக கிரிக்கெட்கோஷ்டியினருக்குமிடையே நடைபெற்ற கிரிக்கெட்போட்டியில் அனலை. ஐயனுர் இளைஞர் மன்றக் கோஷ்டியினர் ஒரு இனிங்ஸ் 4 விக்கட் 47 ஓட்டங்களினுல் வெற்றியீட்டினர்.

## 23-வது ஆண்டுவிழா

கொழும்பு, சனி

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (மாஸ்கோ பிரிவு) அடுத்தமாதம் மூன்ரும் திகதியுடன் அதன் 23-வது ஆண்டினை முடித்துக்கொள்கிறது. இதையொட்டி கம் [illegible] கள் ஒழுங்கு செய்துள்ளது.

## சூதாடியதாக கைதான 23 பேர் பிணையில் விடப்பட்டனர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

நேற்று முன்தினமிரவு யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு கிளப்பில்: சூதாடியதாகக் கைது செய்யப்பட்ட 23 பேரை யாழ்ப்பாணம் பொலிஸார் நேற்றுக் காலை யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. ரி ஜே. ராஜரத்தினம் முன்னிலையிலையில் ஆஜர் செய்தனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள நொதேண்ஸ்போட்ஸ் கிளப்பில் காசுக்கு சூதாடிய குற்றச்சாட்டில் குற்றவாளிகளா, சுற்றவாளிகளா என நீதிபதி ஒவ்வொருவரையும் தனித்தனியே கேட்டபொழுது எல்லோரும்சுற்றவாளிகளெனக் கூறினர்.

23பேர் சார்பிலும் புறக்டர் எஸ். சி. கதிரவேலு, புறக்டர் தளையசிங்கம்யோகநாதன் ஆகியோர் ஆஜராயினர்.

சூதாடிய இடத்தில் கைப்பற்றப்பட்ட, மேசை, கதிரைகள், மேசை விரிப்பு, ரொக்கம் 309 ரூபா ஆகியவற்றையும் பொலிஸார் கோர்ட்டிற்குக் கொண்டுவந்தனர்.

இன்ஸ்பெக்டர் எஸ். சிவபாதம் தலைமைநிலையஇன்ஸ்பெக்டர் வி. கே. கந்தையா ஆகியோர் தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டி நேற்றுமுன்தினமிரவு 8 மணிக்கு 23 பேரையும் கைது செய்தது.

23பேரையும் தலா 100 ரூபா பிணையில் செல்ல உத்தரவிட்டு, செப்டம்பர் 19ம் திகதிவரைவிசாரணையைநீதிபதி ஒத்திவைத்தார்.

---

## கூப்பன்கள் யாருடையவை?

யாழ்ப்பாணம், ஞாயிறு

எழுதுமட்டுவாளுக்கும் மிரிசுவிலுக்குமிடையில் மூன்று பங்கீட்டரிசிப் புத்தகங்களும் மிளகாய், மல்லி, அரிசி முதலியவை கொண்ட ஒரு பையும் கொட்டடி, பீச்ரோட்டிலுள்ள திரு. என். குணம் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தகுந்த அத்தாட்சிகளுடன் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

## பஹாய் இயக்கக் கோஷ்டி விஜயம்

சுழிபுரம், சனி

கடந்த நான்கு தினங்களாக யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் ஈரான் நாட்டைச் சேர்ந்த பஹாய்இயக்கத் தலைவர்கள் திரு. ரி. சமாண்டறியும் அவரது மகன் திரு. எஸ். சமாண்டறியும் சித்தங்கேணிக்கு விஜயம் செய்தனர். யாழ்ப்பாணக்கிளைத் தலைவரும் உணவுக் கட்டுப்பாட்டு உதவி அதிபருமான திரு. எஸ். சிவப்பிரகாசம் இவர்களை சித்தங்கேணியிலுள்ள அங்கத்தவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

திரு. எஸ் சிவப்பிரகாசம் தலைமையில் பஹாய் இயக்கம் சம்பந்தமாக ஒரு விரிவுரை நடத்தப்பட்டது. சித்தங்கேணி தபால் கந்தோர் அதிபர் திரு. சபாரத்தினம் பஹாய் கோஷ்டியினரை வரவேற்று நன்றி கூறினுர்.

---

## பட்டினசபைத் தலைவருக்கு பாராட்டு

ஊர்காவற்றுறை, சனி

ஊர்காவற்றுறை பட்டின சபைத் தலைவர் திரு. வே. சிவசம்பு கனவான்கள் ஒப்பந்தப்படி தலைவர்பதவியை இம்மாதம் 30ந் தேதி இராஜினுமா செய்வதாக உள்ளூராட்சி அதிபருக்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்,

அதிபருக்கு அனுப்பிய கடிதமொன்றின் பிரதியை பட்டினசபையின் மாதாந்தக்கூட்டத்தில் சமர்ப்பித்த போது சபை தலைவரின் சேவையைப் பாராட்டி நன்றி தெரிவிக்கும் தீர்மானமொன்றை நிறைவேற்றியது.

திரு. சிவசம்பு தலைவராயிருந்த காலத்தில் மின்சாரத்திட்டம், இரண்டாவது தண்ணீர்த்திட்டம், பொது விளையாட்டு மைதானம், ஆயுள்வேத வைத்தியசாலை, நூல்நிலையத்தை விஸ்தரித்தல், பஸ்சேவைத் திருத்தங்கள் போன்ற பொதுமுயற்சிகளில் ஈடுபட்டு உழைத்தாரென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியருக்குக் கடிதம்

## நயினுதீவு யாத்திரீகர் கஷ்டம்

நெடுந்தீவிலிருந்து வருடாவருடம் பெரும் தொகையான யாத்திரீகர்கள் நயினுதீவு நாகபூஷணி அம்பாள் ஆலயத்துக்கு அம்பாளைத் தரிசிக்கவும் தமது நேர்த்திக்கடன்களைப் பூர்த்திசெய்வதற்கும் செல்வது வழக்கம். ஆனுல் நெடுந்தீவில் சேவையிலீடுபட்டிருந்த மோட்டார் வள்ளங்கள் யாவும் இப்போது பழுதடைந்துள்ளதால் நாகபூஷணி அம்பாள் ஆலய தரிசனத்துக்குச் செல்லவிரும்பும் யாத்திரீகர்கள் செல்ல முடியாத நிர்ப்பந்தநிலை ஏற்பட்டுள்ளது. இதுயாத்ரீகர்களுக்குப் பெரும் கவலையைக்கொடுத்துள்ளது. நாகபூஷணி அம்பாள் ஆலய உற்சவம் ஆரம்பமாகியுள்ளதால் இவற்றை நன்கு கருத்தில்கொண்டு அங்கு செல்ல விரும்பும் யாத்திரீகர்களின் வேண்டுகோளைநிறைவேற்ற துரித நடவடிக்கை எடுத்து ஆவனசெய்யுமாறு நெடுந்தீவு மக்கள் சார்பில் கேட்டுக்கொள்கின்றேன்.

நெடுந்தீவு. கே. கே.

## தமது வீட்டுக்கு தாமே தீவைத்தாராம்!

சுழிபுரம், சனி

பதிப்புலம் காயாவடியைச் சேர்ந்த ஒருவர் தமது வீட்டுக்குத் தாமே தீ வைத்ததாக அறியப்படுகிறது. குடிபோதையில் காணப்பட்டதாகக் கூறப்படும் இந்த நபர் தமது வீட்டிலுள்ளவர்களுடன் சண்டையிட்டுக் கொண்டு வீட்டுக்குத் தீவைத்ததாகத் தெரிகிறது.

இது சம்பந்தமாக பொலிஸார் புலன் விசாரணை செய்து வருகின்றனர்.

---

## பாதயாத்திரை

யாழ்ப்பாணம், ஞாயிறு

நல்லூர் பஜனைச் சபையின் திருக்கேதீச்சர ஆலய பஜனைப் பாதயாத்திரை இன்று மாலை 5-30 மணிக்கு கட்டுடை சிரணி நாகம்மாள் தேவஸ்தானத்திலிருந்து ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித வாழ்வில்

# எண்கள் புரியும் 'சர்க்கஸ்'

பிறப்பு எண்களைப்பற்றியும் சாதகபாதகமாக திகதிகள் பற்றியும் கடந்த வாரம்ஆராய்ந்தோம், இந்தத்திகதிகளிலும், நீடித்துப் பலன்தரக்கூடிய திகதிகள் ஆரம்பம் நன்ருய் இருந்து இடையில் சிதறிப் போகும் பலன்களையுடைய திகதிகளும் உண்டு. பொதுவாக ஒருவர் தமக்கு நீடித்தபலன் தரவேண்டிய ஒரு கருமத்தை ஆரம்பிக்கும் போது தமது பிறந்த திகதிக்கு சாதகமான திகதியைமட்டுமல்ல, அந்தத்திகதியின் கூட்டு எண் (திகதி மாசம் வருடம்ஆகியவற்றைக் கூட்டிஞல் வரும் எண்) தமக்கு சாதகமானதாஎன்றும் கவனிக்கவேண்டும். உதாரணமாக நாம் முன்னர் கவனித்த 1 எண்ணைஎடுத்துக்கொள்வோம். இந்த எண்ணுக்கு 1,10,19,28 அதிர்ஷ்டகரமான திகதிகள் என்று குறித்தோம். இதிலும் 28-ந் திகதி ஆரம்பமாகும் காரியம் நீடித்துப் பலன்தருவதில்லை, மேலும் இந்த எண்ணுடையவர் தாம் செய்யும் காரியங்களை கூட்டு எண் 1 வரும் திகதிகளிலேயே செய்தல் வேண்டும். அன்றைக்கன்று முடியும் காரியங்களை திகதிமட்டும் சாதகமான நாட்களில் மேற்கொள்ளலாம். அதுபோலவே கூட்டு எண் பாதகமானதாக இருக்கும் நாட்களிலும் காரியம் மேற்கொள்வது துரதிருஷ்டத்தை ஏற்படுத்தும். சிலர் தமது பிறந்த திகதி எண்ணையுடைய தினங்களை அதிர்ஷ்டதினங்கள் என்று கருதுகின்றனர். இது தவறு. ஒரு சில எண்களுக்குத்தான் இது பொருந்தும் பலருக்கு அது பாதகமாகவே முடியும். இனியும் இதுபற்றிநீட்டவேண்டாம். அடுத்த அம்சத்துக்கு வருவோம்.

### பெயரும் பலனும்

என் கலையின்படி பெயர்களை ஆங்கிலத்தில் எழுதும்போது அந்த ஆங்கில எழுத்துக்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர்எண்குறிக்கப்பட்டு அவைகளுக்கு பலன் அறியப்படுகிறது. அப்பெயர்களின் எண்கள் குறிக்கப்பட்ட மனிதரின் பிறப்பு எண்களுக்கு அல்லது திகதி மாதம் வருடம் மூன்றையும் கூட்டுவரும் கூட்டு எண்ணுக்கு இயைந்து பொருத்தமாக அமையும்போது அம்மனிதர் அதன் அனுகூலமாக பலனைப்பெற்று உயர்வடைவதாகவும், பொருத்தமின்றி அமையும் போது பாதகமாகப் பலன்களையே அனுபவிப்பதாகவும் கவனிக்கப்படுகிறது.

### பெயரின் சப்தம்

இதில் முக்கியமான ஒரு அம்சத்தைக் கவனிப்பது அவசியம். ஒருவரின் பேயர் எழுத்தில் எழுதப்பட்டு அது பிறரால் அறியப்பட்டு பிரபல்யமாகும் போது அதன் தன்மைகள் சம்பந்தப்பட்ட மனிதனைப் பாதிக்கின்றது என்பதே பொதுவான கருத்து ஆனல், பெயர் எழுதப்பட்டு அறியப்படாமல் பிறர் வாயால் அழைக்கப்பட்டு பிரபல்யமாகும் பெயரின் தன்மைகளே மனிதனைப்பெரிய அளவில் பாதிக்கின்றன. பாமரமக்கள் மனதில் பெயர்கள் எழுத்தின் மூலம் பிரபல்யமாவது குறைவு, ஆனல் வாயால் அழைக்கப்படும் பெயர்களே அவர்கள் மத்தியில்பிரபல்யமாகின்றன. இதில் நான்கூறவிழைவது என்னவென்ருல்ஒருபெயர் உச்சரிக்கப்படும் போது எழும் சப்தத்தை அப்படியே ஆங்கில எழுத்துக்களில் எழுதி அதன் பலனை அறியவேண்டும் என்பதே உதாரணத்துக்கு ஒரு பெயரை இங்கு பார்ப்போம். ''செம்சன்'' என்ற நபர் தம் பெயரை ஆங்கிலத்தில் 'SAMPSON' என்று எழுதுகின்ருர் என்று வைத்துக்கொள்வோம். இப்பெயர் பிறரால் உச்சரிக்கப்படும் போது 'SAMSAN' என்ற சப்தத்தையே எழுப்புமானல் அந்த சப்தத்தின் எண் 17 ஆகத்தான் இருக்கும். இதன் தன்மை அதிர்ஷ்டகரமான பேர்வழிகளையும் ஓரளவுக்கேனும் துரதிருஷ்டக்காரராய் ஆக்கிவிடக்கூடியதே. இந்த எண்ணைப்பெயரில் கொண்டவர்கள் பொதுவாக குடும்பச்சிக்கல் அல்லது மனக்குறைவுடையவர்களாகவே காணப்படுகின்றனர். இதுபோலவே SILVA, PERERA போன்ற பெயர்களையுடையவர்கள் ஒரளவுக்கேனும்அதிர்ஷ்டசாலிகளாய் இருப்பதைக் காண முடிகின்றது.

—3—

ஆங்கில எழுத்துக்கள் ஒவ்வொன்றுக்கும் எண்களை விற்பன்னர்கள் ஒவ்வொரு எண்களைக்குறித்து அவ்வெண்களுக்கான பலன்களை நிர்ணயித்துள்ளனர். இந்தக்கலை பற்றி ஆராய்ந்துள்ளதமிழ் அறிஞர்கள் பலருங்கூட ஆங்கில எழுத்துக்களையே பயன் படுத்தியுள்ளனர். ஆங்கிலத்தில் குறைவான எழுததுக்களே இருப்பதாலும், எந்த சப்தத்தையும் இலகுவில் எழுதவசதியாய் இருப்பதாலும், இக்கலை ஆங்கில அறிஞர்களாலேயே முதலில் பயன்படுத்தப் பட்டிருப்பதாகக் கருதப்படுவதாலும் ஆங்கில எழுத்துக்களே இக்கலைக்குப் பயன் படுத்தப் படுகிறது.

பெயரின் சப்தம் மனிதரை எந்த அளவுக்கு சாதகமாக அல்லது பாதகமாக பாதிக்கின்றது என்பதற்கு [illegible] என்ற பெயரைக் கவனியுங்கள். சாதாரண கணேஷனாக இருந்த பொழுது அவர் யார் என்றுகூட எவருக்கும் தெரியாது. ஆனல் சிவாஜி கணேஷன் என்று அறியப்படத் தொடங்கியதும், பெரும் புகழும், செல்வமும் அவரைத்தேடி வந்து அடைந்தன! அவர் நிதானமாக இருக்கும்வரை இந்த நிலையிலிருந்து வீழ்ச்சி கிடையாது.

[நமது மூதாதையரான ரிஷிகள், யோகிகள் போன்ற பெருமக்கள் அறிந்து பயன் படுத்திய ரகசியம் பற்றிய குறிப்பு அடுத்தவாரம் வெளிவரும்]

# வடக்கே ::: ::: வருவதற்கு முன்

— மலைமகள் —

மலைநாட்டில் உள்ள பிரஜாவுரிமை பெற்றஇந்திய வம்சாவளியினரை வடக்கு-கிழக்கு மாகாணங்களில் வந்து குடியேறும்படி சமீபகாலத்தில் அரசியல் பிரமுகர்களும், தமிழ்த் தலைவர்களும் அழைப்பு விட்டவண்ணம் இருக்கின்ருர்கள். இந்தப் பிரமுகர்களின் நோக்கம் எவ்வளவு தான் உயர்ந்ததாய் இருந்தபோதிலும். இது எந்த அளவுக்கு நடைமுறைச் சாத்தியமாகும் என்பது பற்றி பலரும் யோசிப்பதில் அர்த்தம் இல்லாமலில்லை, எது எப்படிப் போனலும் ஒரு விஷயத்தை இங்கு சுட்டிக்காட்டுவது அவசியமே.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் இருந்து மலைநாட்டுக்குச் சென்று ஆசிரியத் தொழில்களிலும், தோட்ட உத்தியோகங்களிலும், அரசாங்கப் பதவிகளிலும், வியாபாரத்திலும் ஈடுபட்டுள்ள தமிழர்களில் பெரும்பாலோர் மலைநாட்டுத் தமிழரை தம்மினம் என்றவகையில் பழகுவதில்லை. அவர்களை ஏதோ குறைவான இனம்போல் தான் நடத்துகிருர்கள். இதை எவரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. உண்மை கசப்பாகத்தான் இருக்கும். எனவே முணுமுணுப்புக்கு அவசியமில்லை.

தோட்டங்களில் ஆசிரியர் தொழில்களில் இருக்கும் அநேகர் அந்தரங்க சுத்தியுடன் கற்பிப்பதில்லை. தோட்டப் பாடசாலைகளின் உண்மை நிலையைப் பார்த்தால் எத்தனையோ ஆசிரியர்கள் தகுதியிருந்தும் அங்கே அந்தரங்க சுத்தியுடன் கடமைபுரிவதில்லை என்பது புலனகும். தோட்டக்காட்டான்களுக்கு என்ன படிப்பு என்ற ரீதியில் அநேகர் நடந்து கொள்கின்ருர்கள். பலாங்கொடையில் உள்ள தமிழர் ஒருவருக்கு சொந்தமான தோட்டத்தில் தமிழ் பள்ளி இருக்கின்றது. ஆசிரியரும் இருக்கிருர். ஆனல் அந்தத் தோட்டத்துத் தமிழ்ப்பிள்ளைகள் பக்கத்திலுள்ள சிங்களப்பாடசாலைக்குப் போய் சிங்களம் படிக்கிருர்கள்! அந்தச் சிங்களப்பாடசாலை நடப்பதற்கே இந்தத் தமிழ்ப் பிள்ளைகள் தான் காரணம்!. அந்தத் தோட்டத்தில் தொழில் புரியும் தமிழ் உத்தியோகஸ்தர்கள் தொழிலாளரை ஜாதிஅடிப்படையில்பிரித்து வைத்து நிர்வாகம் நடத்துவதில்தான் அக்கறைகொண்டுள்ளார்களேயன்றி அந்த மக்களின் மேன்மை குறித்து எந்த விதத்திலும் கவலை கொள்வதில்லை. இல்லையென்ருல் தமிழப்பிள்ளைகள் தமிழ் பள்ளிக்குப்போகாமல் சிங்களப்பள்ளிக்குப் போய் சிங்களம் படிப்பார்களா? மலைநாடு பூராவும் பொதுவாக இதே நிலைதான்.

இந்தநிலைமையில் தமிழ்த் தலைவர்களின் பேச்சை நம்பி வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு மலைநாட்டுத் தமிழர்கள் எப்படி வருவார்கள்! அப்படியேவந்தாலும், இங்கு அவர்களை அன்போடு ஏற்றுக்கொள்ளும் சூழ்நிலை உருவாகி விட்டதா? அத்துடன் அவர்களை இங்கு குடியேற்றும் அளவுக்குஏதாவது பூர்வாங்க ஏற்பாடு இருக்கிறதா? இங்கும்தான் வேலையில்லாத் திண்டாட்டம் குறைந்துவிட்டதா? அவர்கள் வந்து குடியேறுவதால் இங்குள்ள மக்கள் மத்தியில் வேறு புதிய பிரச்னைகள் உருவாகாதா? அவைகளை நிவர்த்திக்க ஏதும் திட்டம் இருக்கின்றதா?

எல்லாவற்றுக்கும்மேலாக ஒருவிஷயத்தைஉன்னிப்பாக கவனிக்கவேண்டும். இங்கிருந்து மலைநாட்டுக்குச்சென்று தொழில்புரியும்தமிழர்களை தம்மைத்தாழ்வான இனம் போல் கருதி ஒதுக்கியும் ஒதுங்கியும் வாழும்போது அப்படியானவர்களின் பிரதேசத்திலேயே குடியேறிவிட்டால் எங்ஙனம் ஏற்றுக்கொள்வார்களென்று மலைநாட்டு மக்கள் மத்தியில் இயற்கையாக எழும் ஐயப்பாட்டை நீக்குவதற்கு வழிகோலவேண்டும். உண்மை நிலையை உணர்ந்து அதற்கு பரிகாரம் காணுமல் வெறுமனே அழைப்பு விடுவதால் பயனில்லை. மலைநாட்டுமக்களில் ஒருவராக [illegible] பார்த்தால்தான் இந்த நிலைமையும் புரியும்.

# பொன் வயல்

சர்வதேச தொழிலாளர் நலஸ்தாபனம்

## தொழிற்சங்க இயக்கம் அல்ல, ஐ. நா. வின் ஒரு அங்கம்!

[ஜாக்ஸ் விக்டர் மொரின் - தொழிலாளர் கல்விநிபுணர் - கனடா]
தமிழில் 'பேனு'

பல்வேறு தொழிலாளர் இயக்கங்கள் சர்வதேச அடிப்படையில் இயங்கும் இந்தக் காலத்தில் சர்வதேச தொழிலாளர் நலஸ்தாபனத்தையும் ஒரு தொழிலாளர் இயக்கம் என்றே பலர் எண்ணிக் கொண்டு இருக்கின்ருர்கள் ஐ. சி. எப். ரி. யு; ஐ. எல். ஓ., யு. என்; யுனெஸ்கோ, போன்ற சர்வதேசஸ்தாபனங்களைக் குறிக்கும் ஆங்கில எழுத்துக் குறியீடுகளை உபயோகிக்கையில் அநேகர் தடுமாறிப்போகின்ருர்கள்.

சர்வதேச தொழிலாளர் நலஸ்தாபனத்தில் தொழிலாளருக்கு முக்கியமான பெரும் பங்கு உண்டு என்ருலும், சர்வதேச சுதந்திரத்தொழிற்சங்க சம்மேளனத்தைப்போன்று அது ஒரு தொழிற்சங்க இயக்கம் அல்ல என்பதை இங்கு விளக்குவோம்.

### ஐ. நா. வின் நிபுணத்துவ சபை

ஐ. நாடுகள் சபையின் நிபுணத்துவ சபைகளான உணவுவிவசாய ஸ்தாபனம், (எஸ். ஏ. ஓ) உலக சுகாதார ஸ்தாபனம் (டபிள்யு. எச். ஓ) ஐ. நா. கல்வி, விஞ்ஞான, சமூகவியல் ஸ்தாபனம் (யுனெஸ்கோ) சர்வதேச விமானசேவை ஸ்தாபனம் (ஐ.சி.ஏ.ஓ) ஆகியவை போன்றதே இந்த சர்வதேசதொழிலாளர் நல ஸ்தாபனமும் (ஐ. எல். ஓ)

### சமூக நீதியும் உலக அமைதியும்

இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிறகு ஸ்தாபிக்கப்பட்ட ஐக்கியநாடுகள் சபையின் ஓர் அங்கமாக விளங்கியபோதிலும் அதற்கு முன்பிருந்தே இயங்கிவருகின்றது. 1919ம் ஆண்டு முதலாவது உலக யுத்தத்திற்கு முடிவுகட்டிய வார்சா ஒப்பந்தத்தின் X III அம்சத்தின் அடிப்படையில் இந்த ஸ்தாபனம் நிறுவப்பட்டது. சமூகநீதியின் அடிப்படையில்தான் உலகஅமைதியை ஏற்படுத்த முடியும் என்று சர்வதேச தொழிலாளர் நல ஸ்தாபனம் நம்புகிறது என்று அதன் அமைப்பு விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ''சுதந்திரம், கண்ணியம், பொருளாதார பாதுகாப்பு, சமசந்தர்ப்பம் ஆகியவை நிலவும் சூழ்நிலையில் மனிதர்கள் யாவரும் தத்தம் லோகாயத, ஆத்மீகவளர்ச்சிக்கும் மேம்பாட்டுக்கும் வகைசெய்துகொள்ளும் உரிமையுடையவர்களாவர்' என்று 1944ம் ஆண்டு பிலடெல்ட்பியாவில் கூடிய சர்வதேச தொழிலாளர் நலஸ்தாபனம் பிரகடனம் செய்துள்ளது. ''ஒரு இடத்தில் வறுமை நிலவுமாஞல் அதனல் எல்லா இடங்களிலும் வளமைக்கு ஆபத்தாகும்'' என்று அப் பிரகடனம் கூறுகின்றது.

சர்வதேச தொழிலாளர் நல ஸ்தாபனத்தின் அதிமுக்கிய அதிகாரபீடம் சர்வதேச தொழில் மகாநாடாகும். இந்தப் பீடம் வருடாவருடம் கூடி பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. (1) ஆட்சிபீடத்தைத் தெரிவுசெய்தல்; (2) அங்கத்துவ நாடுகளின் நிதி உதவி மூலம் சேரும் 8 கோடி ரூபாய்களுக்கான வரவு—செலவுத் திட்டத்தை உருவாக்குதல்; (3) சர்வதேசரீதியில் தொழில் தராதரத்தை ஏற்படுத்தல்; (4) சமூக, மற்றும் தொழிலாளர் பிரச்னைகள் குறித்து சர்வதேச அடிப்படையில் விவாதங்கள் நடைபெற வழிசெய்தல்.

(7-ம்பக்கம் பார்க்க)

## உங்களோடு...!

அன்புள்ள வாசகர்களே!

கவிதை, கட்டுரைகள் ஏராளமாக வந்துள்ளன. அவைதகுதி நோக்கம் பிரசுரிக்கப்படும். நீங்கள் அனுப்பும் விஷயதானங்களை தாளின் ஒரே பக்கத்தில் சுருக்கமாக எழுதி கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்புங்கள்.

பாராட்டுக்களும் ஏராளமாகவந்துள்ளன. அவை எல்லாவற்றையும் பிரசுரிக்கஇயலாது. ஒரு சிலவற்றைக் கீழே தந்துள்ளோம்.

வணக்கம்.
பொன்வயல்,
த. பெ. 49,
'ஈழநாடு',
யாழ்ப்பாணம்.

### பூரிப்பு

'பொன்வயல்' கண்டேன், பூரிப்புக் கொண்டேன். மாறிவரும் மலையகம் என்ற கட்டுரை என்னை சிந்திக்வைத்தது. மலைநாட்டைச் சேர்ந்தவன் என்பதால் அக்கறையோடு படித்தேன். அதை எழுதியவர் யாரோ? 'எண்கள் புரியும் சர்க்கஸ்' சிறந்த அம்சம். ஆனல் முதல் பகுதி படிக்க இயலாமல் போய்விட்டது. இனிமேல் தொடர்ந்து படிப்பேன். ஏ. எம். ராமையா, பகதல ரோடு, பம்பலப்பிட்டிய.

### மகிழ்ச்சி

தங்கள் பத்திரிகையைத் தினமும் நான்படிக்கிறேன். 'பொன்வயல்' என்னுமோர் புதிய அம்சத்தையும்சேர்த்திக்கின்றீர்கள்என வாசித்தறிந்து மகிழ்ச்சியுற்றேன். செ. செல்வராஜா, கலைமகள் வீதி, அரியாலை மேற்கு.

### நல்லவிளைச்சல்

வணக்கம்பல, கடந்த வாரம் பொன்வயலில் நல்ல விளைச்சல். பார்க்கக் கண்குளிர்ந்தது. உள்ளமும் மிக மகிழ்ந்தது உழவர் கோனுகிய உங்களுக்கு எனது பாராட்டுக்கள். நா. நகுலேந்திரன் பொல்கெங்கொட வீதி, நுகே கொடை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2-வது கிரிக்கெட் டெஸ்ட் வெற்றிதோல்வியின்றி

# முடிவடையலாம்

## இரண்டாம் இன்னிங்ஸில் மேற்கிந்தியா சோபிக்குமா?

— "அவதானி" —

ஸாட்ஸ், ஜூன் 18

இங்கிலாந்து - மேற்கிந்திய இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட் (இன்று சனிக்கிழமை) மூன்ருவது நாளை எட்டிப் பிடித்து நான்காவது நாளுக்குத் "தாவு"வதற்கு முன்னர், இரண்டாவது கிரிக்கெட் டெஸ்டின் "தலைவிதி"யை நிர்ணயிப்பதில் கிரிக்கெட் ரசிகர்கள் இப்பொழுது ஈடுபடத் தொடங்கி விட்டனர். இங்கு மப்பும் மந்தாரமுமாகவிருக்கும் இந்நேரத்தில், இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட் ஐந்து நாட்களும் பூரணமாக நடைபெறுமா? இக் கேள்விக்கு லாட்ஸ் கிரிக்கெட் மைதானம் சந்தேகமான பதிலையே தெரிவிக்கின்றது. கால நிலை சீராகவில்லாது இங்கிலாந்தும் ஒரு படி முன்னேறுமாளுல், இக் கிரிக்கெட் டெஸ்ட் வெற்றி தோல்வியின்றியே முடிவடையும்.

மான் செஸ்டரில் நடைபெற்ற முதலாவது கிரிக்கெட் டெஸ்டில் இங்கிலாந்தை இன்னிங்ஸால் வெற்றி கொண்ட மேற்இந்தியா, லாட்ஸில் ஓட்டங்களைப் பெறுவதில் மிகவும் சிரமப்படுகிறதென்றே சொல்ல வேண்டும்.

### ஹிக்ஸின் அபார வீச்சு

இங்கு ஆரம்பமான இரண்டாவது கிரிக்கெட் டெஸ்டில் மேற்கிந்தியாவே முதலில் துடுப்பெடுத்தாடி தனது முதல் இன்னிங்ஸில் மொத்தம் 269 ஓட்டங்களைப் பெற்றது. முதலாவது கிரிக்கெட் டெஸ்டுடன் இதனை ஒப்பிடும் பொழுது மேற்கிந்தியாவின் தரம் மிகவும் குறைந்து விட்டதென்றே சொல்லலாம். இங்கிலாந்து பந்து வீச்சுக்காரர் ஹிக்ஸ் 91 ஓட்டங்கள் கொடுத்து திறமான ஆறு விக்கெட்டுகளை 'பதம்' பார்த்து விட்டார். இதன் விளைவாகத்தானே மேற்கிந்திய துடுப்படி வீரர்கள் ஒருவர் கூட நூறு ஓட்டங்கள் எடுக்க முடியவில்லை- முதல் இன்னிங்ஸில். ஒரு இன்னிங்ஸில் மட்டும் 6 விக்கட்டுகளை கைப்பற்றியிருக்கும் ஹிக்ஸின் சாதனை பாராட்டத்தக்கது.

### இங்லாந்தின் 'விளாசல்'

நேற்று பிற்பகல் இங்கிலாந்து தனது முதல் இன்னிங்ஸை விளையாட ஆரம்பித்தது. மில்பேர்னும் பாய்கொட்டும் ஆட்டமிழந்த போதிலும் இறுதி நேரத்தில் பரிங்டனும், கிறேவ்னியும் "ஜோடி" சேர்ந்து விளாசத் தொடங்கினர். ஆட்டநேரம் வரை இவர்களிருவரும் முறையே 65,08 ஓட்டங்கள் எடுத்திருந்தனர். அப்பொழுது இங்கிலாந்தின் ஸ்கோர் இரண்டு விக்கட்டுகள் நஷ்டத்துக்கு 145 ஆகவிருந்தது. இவர்களிருவரும் இன்று தொடர்ந்து விளையாடினர். இலங்கை நேரப்படி இக்கிரிக்கெட் டெஸ்ட் பிற்பகல் 1-30-க்கு ஆரம்பமாகி இரவு சுமார் 11 மணிக்கு முடிவடைகிறது.

### நிலைமை எப்படி?

இன்று மூன்ருவது நாள் எப்படி இருக்கும் என்பது தெரியவில்லை. கால நிலை சீராகவிருந்து இங்கிலாந்து வீரர்களும் 'விளாசித்' தள்ளுவார்களேயாளுல் இரண்டாவது கிரிக்கெட் டெஸ்டில் நிச்சயமாக ஒரு மாற்றம் ஏற்படலாம். இங்கிலாந்து கோஷ்டியில் அதிகமான ஓட்டங்களை எடுப்பவர்கள் இம்முறை இருக்கின்றனர் என்பது மேற்கு இந்தியாவுக்குத் தெரியாததல்ல.

லாட்ஸ் கிரிக்கெட் மைதானம் மேற்கிந்திய கிரிக்கெட் கோஷ்டிக்கு பாதகமாகவிருக்கலாம். ஆனுல் இதனை இங்கிலாந்து பயன்படுத்துமா என்பதுதான் கேள்வி.

கிரிக்கெட் டெஸ்ட் போட்டிகளில் எதனையுமே முன்கூட்டியே சொல்லிவிட முடியாது! முதல் இன்னிங்ஸில் "ஆட்டம்" கண்ட மேற்கிந்தியா இரண்டாவது இன்னிங்ஸில் அபாரமாக விளையாடிளுலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இதே மாதிரித்தான் இங்கிலாந்தின் நிலையும் அமையும். இப்பொழுது இன்னிங்ஸால் இங்கிலாந்து தோல்விபெறுமா என்ற நிலைமைமாறி மேற்கிந்தியா சாதாரண வெற்றி பெறும் என்ற முடிவும் தளர்ந்துகொண்டு வருகிறது. அப்படியாளுல்...... வெற்றி தோல்வியின்றித்தான் இப்போட்டி முடிவடையவேண்டுமா...?

## இளங்கோ இல்லம் முதலிடம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

அரியாலை அரசினர் ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையின் 3-வது வருடாந்த விளையாட்டுப் போட்டி நல்லூர் வட்டார வித்தியாதரிசி என். ஆர். பாலசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இளங்கோ இல்லம், வள்ளுவர் இல்லம், பாரதி இல்லம் ஆகிய 3 இல்லங்களுக்கிடையே நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் இளங்கோ இல்லம் 180 புள்ளிகளையும், வள்ளுவர் இல்லம் 138 புள்ளிகளையும். பாரதி இல்லம் 134 புள்ளிகளையும் பெற்றது.

போட்டிகளில் வெற்றி பெற்ற சில வீரர்களினதும் வீராங்கனைகளினதும் விபரம் வருமாறு:

100 யார் ஓட்டம் ஆண்கள் (மேற்பிரிவு): ம கனகலிங்கம் பா இ, மு பூபாலராசா இ இ, மு சண்முகலிங்கம் வ இ.

மத்திய பிரிவு: சி சுப்பிரமணியம் இ இ, வே நல்லையா வ இ, து துரைசிங்கம் வ இ.

கீழ்ப்பிரிவு: க தவராசா வ இ, ஏ கேஸ்வரன் வ இ, சை சந்திரபோஸ் பா இ.

பெண்கள் மேற்பிரிவு: அருக்மணி வ இ, து மோகனகுமாரி இ இ, த ஜெகதாம்பிகை வ இ.

மத்திய பிரிவு: இ பரமேஸ்வரி இ இ, கு புஸ்பவதி இ இ, இ மேரிறெஜிஸ் இ இ.

220 யார் ஓட்டம் ஆண்கள் (கீழ்ப்பிரிவு): க தவராசா வ இ, பெ ஏகேஸ்வரன் வ இ, பொ சந்திரபோஸ் வ இ.

மத்திய பிரிவு: சி சுப்பிரமணியம் இ இ, வே நல்லையா வ இ, சி கா சிலிங்கம் பா இ.

மேற்பிரிவு: மு சண்முகலிங்கம் வ இ, ம கனகசிங்கம் பா இ.

ஒரு மைல் ஓட்டம் ஆண்கள்: க பரமசாமி வ இ, ம கனகசிங்கம் பா இ, க கந்தசாமி பா இ.

குண்டெறிதல் ஆண்கள்: ம தெய்வேந்திரன் பா இ, மு பூபாலராசா இ இ, த பரமசாமி வ இ.

சகல போட்டிகளிலும் வெற்றி பெற்று மெய்வல்லுன வீரர்களாகவும், வீராங்கனைகளாகவும் தெரிவு செய்யப்பட்டவர்கள் விபரம்:

கீழ்ப்பிரிவு ஆண்கள்: க தவராசா வ இ; கீழ்ப்பிரிவு பெண்கள்: க வரலெட்சுமி இ இ ; மத்தியபிரிவு ஆண்கள்: சி சுப்பிரமணியம்; மத்தியபிரிவு பெண்கள்: இ மேரிறெஜிஸ் இ இ; மேற்பிரிவு ஆண்கள்: ம தெய்வேந்திரன் பா இ; மேற்பிரிவு பெண்கள்; அ ருக்மணி வ இ.

வெற்றி பெற்ற வீரர்களுக்கு நல்லூர் வித்தியாதரிசி என். ஆர். பாலசிங்கம் பரிசில்களை வழங்கிஞர். திரு. சிவபாதசுந்தரம் நன்றியுரை வழங்கிஞர். இப் போட்டிகள் மேற்படி பாடசாலையின் மைதானத்தில் நடைபெற்றது.

## பேச்சுப்போட்டி முடிவுகள்

கோண்டாவில், சனி

இணுவில் சைவமகாஜன வித்தியாசாலை மண்டபத்தில் இல்லங்களுக்கிடையே நடைபெற்ற பேச்சுப்போட்டிகளின் முடிவுகள் வருமாறு:

மேற்பிரிவு: (ஆண்கள்) திரு இ கதிரவேல் முதலித்தம்பி (மயில்வாகனம் இல்லம்), திரு சி கணேசலிங்கம் (பொன்னையா இல்லம்), ஐ அருணந்தி (பொ இ), தி விசயநாதன் (மயில்வாகனம் இல்லம்).

மத்தியபிரிவு: க விவேகானந்தன் (அப்பாக்குட்டி இல்லம்), க. குகதாசன் (பொ இ), ச உபயசேகரம் (ம இ)

கீழ்ப்பிரிவு: வ கேசவமூர்த்தி (அ இ), வ மகேஸ்வரன் (பொ இ) ந திருச்குமார் (அ இ).

பெண்கள்: மேற்பிரிவு ச சிவயோகராணி (ம இ), ந முத்துராசம் (ம இ). ப தர்மகுலராணி, நா கமலாம்பிகை (அ இ).

மத்தியபிரிவு: இ சிவனேஸ்வரி (ம இ), இ வசந்தகுமாரி (அ இ), சு தெய்வானைப்பிள்ளை (ம இ).

கீழ்ப்பிரிவு: [illegible] (அ இ) [illegible] (பொ இ) புவனேஸ்வரி (அ இ).

## சுகாதார விழா போட்டி முடிவுகள்

மாவிட்டபுரம், சனி

காங்கேசன்துறை பட்டினசபை முன்றலில் நடைபெற்ற சுகாதார விழாவிற் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சுவீடன்-இலங்கை குடும்பநல கட்டுப்பாட்டதிகாரி டாக்டர் கிங்ஸ் பேசுகையில் நாட்டின் அபிவிருத்திக்கு குடும்பக் கட்டுப்பாடு அவசியமானது எனக் குறிப்பிட்டார்.

வலி-வடக்கு சுகாதார வைத்திய அதிகாரியால் ஏற்பாடு செய்யப்பட்ட இச்சுகாதார விழாவிற்கு பட்டினசபைத் தலைவர் திரு ஆ. சதாசிவம் தலைமைவகித்தார். காங்கேசன்துறை வைத்திய அதிகாரி டாக்டர் ஆ. பொன்னுச்சாமியும் பேசிஞர். சுகாதார விழாச் சம்பந்தமாக நடத்தப்பட்ட போட்டி முடிவுகள் விபரம் வருமாறு:-

பேச்சுப்போட்டி: தமிழ்க்கலவன் பாடசாலை தாவடி, அமெரிக்க மிஷன்பாடசாலை காங்கேசன்துறை, சைவ வித்தியாசாலை கொல்லங்கலட்டி.

பாட்டுப் போட்டி: தமிழ்க் கலவன் பாடசாலை தாவடி, சைவப்பிரகாச வித்தியாசாலை தெல்லிப்பளை, அ.மி. பாடசாலை காங்கேசன் துறை

நடனம்: அருணுசலம் தமிழ்க் கலவன் பாடசாலை அளவெட்டி, சைவப்பிரகாச வித்தியாசாலை தெல்லிப்பளை.

நாடகம்: அருணேதயக் கல்லூரி அளவெட்டி, தமிழ்க் கலவன் பாடசாலை தாவடி, அமெரிக்க மிஷன் பாடசாலை காங்கேசன் துறை.

கயரோக நிவாரண சங்கக் கட்டுரைப் போட்டி பி. மகேந்திரன் (அ மி பாடசாலை காங்கேசன்துறை) வி குணலிங்கம் (அ மி பாடசாலை) எஸ் பத்மநாதன் வீ ஆ பாடசாலை

சனசமூக நிலையப் பரிசு: காங்கேசன்துறை இரணைக்குடிசை இளைஞர் முன்னேற்றக்கழகத்தின் 'சமூக சேவை பொன்னம்பலம்' என்னும் நாடகத்துக்கு வழங்கப்பட்டது. செல்வி சதாசிவம் பரிசுகளை வழங்கிஞர்.

## யாழ்ப்பாணக்கல்லூரி வெற்றி

சுழிபுரம், வெள்ளி

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி இரண்டாம் பிரிவுக்கோஷ்டிக்கும் சுன்ஞகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி இரண்டாம்பிரிவுக்கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் யாழ்ப்பாணக் கல்லூரி வெற்றி பெற்றது.

## பொன்வயல்

'குஞ்சி அப்பு' பேசுகிறுர்

### "ஏன் இந்தமோகம்?"

இப்ப எல்லா இடத்திலையும் எதைப்பற்றிக் கதைக்கினம் என்று தெரியுமே? எல்லாம் இந்தக் கூப்பனுக்கு துணிகொடுக்கிறதப் பற்றித்தான்.

எது எப்படியிருந்தாலும் எங்களுக்கு வெளிநாட்டுப் பொருளில இவ்வளவு மோகம் கூடாது கண்டியளோ. இயன்றவரை நாங்கள் எங்கட உள்ளூர்சாமான்களைத்தான் பாவிக்கப்பழக்கிக்கொள்ளவேண்டும். அப்பதான் எங்கட உள்ளூர்ச் சமான்களிட தரமும் உயரும். தேசபக்தர்களும் அப்படித்தான் கூறியிருக்கினம்.

வெளிநாட்டிலே இருந்து இப்ப வாற துணியளும் முந்தி எங்கட துணிமாதிரி இருந்து தான் இந்தநிலைக்கு வந்தது.

வெள்ளைக்காரர் இருக்கினம் எல்லே, அவயள் எங்க போளுலும் தங்கட ஊர்ச் சாமான் இருக்கோ என்று கேட்டு இல்லாட்டித்தான் பிறநாட்டுச்சாமான் வாங்கிறவயள்.

கடசியா ஒன்று சொல்லுறன். நாங்கள் படிப்படியா எங்கட வெளிநாட்டுச் சரக்கில இருக்கிற ஆசையைக் குறைத்து எங்கட சமான்களை ஆதரிக்கவேண்டும். அப்பதான் எங்கட நாடும் நாமும் உயர வழியுண்டு, கேட்டியளோ...!

"குஞ்சி அப்பு"

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

### முப்பிரிவுகள்

ஒவ்வொரு நாட்டிலிருந்தும் இந்த மகாநாட்டுக்கு வரும் தூதுகோஷ்டிகளில் 4 அங்கத்தவர்கள் இருப்பர். இருவர் அரசாங்கப் பிரதிநிதிகள், ஒருவர் தொழிலாளர் பிரதிநிதி, மற்றவர் முதலாளிகளின் பிரதிநிதி. இந்தப் பிரதிநிதிகள் தம் தம் கருத்துக்களை சுதந்திரமாக வெளியிடுவர். தமது அரசாங்கத்தோடும், தமக்கிடையிலும் இவர்கள் கருத்துவேற்றுமை கொள்ளலாம். இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. எஸ். தொண்டமான் இந்த மகாநாட்டில் இலங்கைப் தொழிலாளர் பிரதிநிதியாகத் பல தடவைகள் கலந்துகொண்டு இருக்கின்ருர்.

(இன்னும் வரும்)

"லீடன்" LEYDEN

தயாரிப்புகள்:-

- பெனியன்
- ஸ்போட் சேட்
- ரி சேட்
- ரெறி சேட்
- ரெமி பிளவுஸ்
- பேபி வெஸ்ட்
- காலமேஸ் (Nylon & Cotton)

லீடன் காமென்ஸ்

32A, கே. கே. எஸ். ரேட், யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரசு 'கழக்மும்' வேலை நிறுத்தம் செய்யும் அசீஸ் யூனியன் கோரிக்கைக்கு ஆதரவளிக்க முடிவு

கொழும்பு, வெள்ளி

**ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் நடத்திவரும் வேலைநிறுத்தத்தை ஆதரித்து வேலைநிறுத்தம் செய்வதென தமிழரசுக் கட்சியின் ஆதரவில் இயங்கும் இலங்கை தொழிலாளர் கழகம் முடிவு செய்திருக்கின்றது.**

**ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தோட்டத் தொழிலாளருக்கு ரூ. 17-50 சதம் பஞ்சப்படி வேண்டுமென்று கூறி வேலைநிறுத்தம் செய்து வருகின்றது. இந்தக் கோரிக்கைக்கு ஆதரவாக இம்மாதம் 21-ம் திகதி வேலைநிறுத்தம் செய்வதென இலங்கை தொழிலாளர் கழகம் முடிவு செய்திருக்கிறது.**

ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸின் பஞ்சப்படிக் கோரிக்கைக்கும் அது நடத்தும் வேலைநிறுத்தத்துக்கும் இலங்கை வர்த்தக ஊழியர் சங்கம், வங்கி ஊழியர் சங்கம், இலங்கை தோட்ட உத்தியோகஸ்தர் சங்கம், லங்கா சமசமாஜக் கட்சியின் புரட்சிவாதப் பிரிவின் ஆதிக்கத்தில் இயங்கும் தோட்டத் தொழிலாளர் சங்கம் ஆகியவை ஏற்கனவே ஆதரவு தெரிவித்துள்ளன.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வேலைநிறுத்தத்துக்கு ஆதரவு அளிக்காது போனாலும் ஆட்சேபம் எதுவும் தெரிவிக்கவில்லை.

இலங்கை தொழிற் சங்க சம்மேளனம் தனது அங்கத்தவர்களுக்கு சம்பள அதிகரிப்பு கோரி நடத்திவரும் வேலை நிறுத்தத்தை தோட்டத் தொழிலாளருக்கு ஆதரவாக நீடிக்கக் கூடும் என்று தெரிகின்றது. அத்துடன் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதிக்கத்திலுள்ள இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கம் வேலை நிறுத்தத்தில் இறங்கக் கூடும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

இதற்கிடையில் வேலை நிறுத்தம் நடைபெறும் தோட்டங்களில் அமைதியும் ஒழுங்கும் நிலவுவதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் படி ஜனநாயகக் காங்கிரஸ் தலைவர் திரு. அப்துல் அஸீஸ் இலங்கை தோட்ட முதலாளிமார் சம்மேளனத்துக்கு எழுதியிருக்கின்றார்.

### தொழில் மந்திரி

தொழில் மந்திரி ஜனுப் எச். எம். முகமத் நேற்று யு. என். பி. வாலிபர் இயக்க கூட்டத்தில் பேசிய போது தொழிலாளர்களின் நலனுக்காக தாம் பல நடவடிக்கைகளை மேற்கொள்ள விருப்பதாக தெரிவித்தார்.

நேஷனல் கிறின்லே வங்கி ஊழியர் வேலை நிறுத்தமும் தேசிய ஜவுளி கூட்டுஸ்தாபன ஊழியர் வேலை நிறுத்தமும் தொடர்ந்து நடைபெறுகின்றன

# நியாயமின்றி கண்டிக்கின்றன

## பத்திரிகைகள்மீது பிரதமர் சீற்றம்

கொழும்பு, வெள்ளி

பிரதம மந்திரி டட்லி சேனநாயக்கா இன்று ஐக்கியதேசியக்கட்சி வாலிபர் இயக்கத்தின் மகாநாட்டில் பேசியபோது பத்திரிகைகளின் போக்கைக் கடுமையாகக் கண்டித்தார்.

மத்திரிகைகள்தான் யு. என். பி. யை ஆட்சிக்கு கொண்டுவந்தன என எண்ணிக் கொண்டிருக்கின்றன. ஆனால் உரிமைகளை இழந்து நசுக்கப்படவிருந்த பத்திரிகைகளைக் காப்பாற்றியது யு.என்பி என்பதைஇவர்கள் உணரவேண்டும் என் பிரதமர் கூறினார். ஜனநாயகத்தை நாம் காப்பாற்றினோம். ஆனால் பத்திரிகைகள் உயிர் பிழைத்தன என்று பிரதமர் குறிப்பிட்டார்.

மந்திரிசபையின் உறுப்பினர்களான இரண்டு பீரிஸ்கள் பற்றி பத்திரிகைகள் நியாயமற்ற முறையில் கிண்டல் செய்துள்ளன. அவர்கள் இரண்டு பீரிஸ் கோப்பை ஜோடியாக இருக்கலாம் ஆனால் எவரும் அவர்களை விலைக்கு வாங்கி விடமுடியாது'' என்றார் பிரதமர்.

### எல்லோரும் சமம்

மோசடிகள் மலிந்துள்ளதாக கருதப்பட்ட இந்தியர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டபோது சிங்களவர்களும் பாதிக்கப்பட்டதாக என்னை குற்றம் சாட்டுகிறார்கள் சிலர். குற்றம் செய்கிறவர்கள்யாராய் இருந்தாலும் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கச் செய்வேன்.

கல்விமந்திரி திரு. இரியகொல்லையும் பத்திரிகைகளைக் கண்டித்துப் பேசினார் வேறு பலரும் பேசினர்

---

### என்ஜினியர்கள் தற்காலிகவேலைநீக்கம்

கொழும்பு, வெள்ளி

பொத்துவில் பாலம் கட்டும்பொழுது தகுந்த முறையில் கவனம் செலுத்தவில்லையென்ற காரணத்தினால் இரு என்ஜினியர்கள் தற்காலிகமாக வேலைநிக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

திரு. எம். கார்த்திகேசு, திரு. ரி.எஸ். முத்துக்குமாரசாமி ஆகிய இந்த இரு என்ஜினியர்கள் மீது குற்றப் பத்திரிகைள் பொது மராமத்து இலாகாவினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள சில ஆண்டுகளுக்குமுன் திரு. கார்த்திகேசன் யாழ்ப்பாணத்தில் கடமையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

---

### லிகிதர் சேவை சங்கக் கூட்டம்

சுழிபுரம், சனி

அரசாங்கலிகிதர் சேவை சங்க யாழ்ப்பாணக் கிளையின் வருடாந்தக் கூட்டம் ஜூலை மாதம் 10-ம் திகதி நடைபெறவிருக்கிறது. இதற்கான சகல ஒழுங்குகளையும் கிளைச் செயலாளர் கவனித்து வருகின்றார்.

---

### தேசிய சுவீப் முடிவுகள்

குளியாப்பிட்டி, ஜூன் 18

94-வது சுவீப் இழுப்பு முடிவுகள் வருமாறு:--

முதல பரிசு

10 L 0450

ரூ. 1,00,000 (அல்லது 73,500 ரூபாவும் மொறிஸ் காரும்.)

இரண்டாவது பரிசு

39 N 0878

ரூ. 40,000 (அல்லது 24050 ரூபாவும் ஸ்கூஸா காரும்.)

மூன்றாவது பரிசு

12 M 0880

ரூ. 10,000

தலா ரூபா 2,343-00 பெறும் 100 டிக்கெட்டுகள் விபரம்:

| | |
|---|---|
| 06 V 0888 | 59 B 0595 |
| 21 E 0442 | 54 H 0715 |
| 25 W 0330 | 50 R 0390 |
| 42 W 0749 | 43 H 0199 |
| 06 C 0569 | 76 F 0737 |
| 45 V 0077 | 67 Y 0122 |
| 06 M 0015 | 13 B 0947 |
| 59 B 0170 | 11 V 0928 |
| 79 V 0072 | 04 O 0957 |
| 18 D 0135 | 38 C 0104 |
| 54 D 0135 | 38 C 0104 |
| 54 Q 0272 | 77 N 0084 |
| 14 X 0259 | 04 Z 0323 |
| 01 H 0323 | |
| 28 C 0617 | 61 C 0373 |
| 72 V 0433 | 26 O 0047 |
| 45 P 0965 | 73 W 0378 |
| 24 X 0448 | 48 K 0284 |
| 28 F 0803 | 41 Q 0327 |
| 54 S 0354 | 52 F 0305 |
| 54 F 0604 | 46 U 0384 |
| 55 G 0977 | 55 Q 0947 |
| 68 S 0549 | 13 A 0841 |
| 69 N 0157 | 80 S 0876 |
| 78 W 0111 | 16 R 0121 |
| 61 L 0400 | 21 Q 0581 |
| 50 D 0039 | |
| 12 Q 0186 | 31 H 0667 |
| 69 E 0283 | 54 G 0325 |
| 66 A 0724 | 25 A 0906 |
| 16 P 0490 | 64 C 0330 |
| 40 T 0495 | 72 E 0690 |
| 28 O 0112 | 77 D 0523 |
| 64 P 0392 | 08 P 0857 |
| 08 V 0309 | 40 U 0675 |
| 59 A 0132 | 28 J 0026 |
| 77 E 0440 | 80 T 0958 |
| 67 R 0474 | 48 U 0029 |
| 49 R 0832 | 58 R 0681 |
| 80 G 0434 | |
| 58 A 0542 | 69 S 0874 |
| 71 R 0196 | 73 R 0587 |
| 18 A 0323 | 07 Q 0286 |
| 34 H 0765 | 28 R 0739 |
| 08 C 0638 | 23 T 0298 |
| 77 X 0913 | 45 D 0116 |
| 60 Y 0751 | 53 D 0279 |
| 02 X 0946 | 43 W 0284 |
| 12 A 0455 | 08 L 0287 |
| 50 M 0992 | 04 D 0581 |
| 66 Q 0495 | 44 U 0613 |
| 55 B 0116 | 18 A 0237 |
| 34 D 0021 | |

---

# "வெள்ளைப் பிடிக்கத்தியால் எதிரி வயிற்றில் குத்தினர்"

## உரும்பராய் கொலைவழக்கில் பெண் சாட்சியம்

யாழ்ப்பாணம், சனி

''மனைவியை காலால் உதைத்து விட்டுச் சென்ற எதிரி, மீண்டும் வந்து இடுப்பில் இருந்த வெள்ளைப்பிடிக் கத்தியை எடுத்து, ஐயாத்துரையின் வயிற்றில் பொத்திப்பிடித்துக்குத்தினர், மீண்டும் இரண்டாவது தடவையாக, ஐயாத்துரையின் நெஞ்சில், அதே கத்தியால் எதிரி குத்திய போது, அவர் நிலத்தில் விழுந்தார்.''

உரும்பராய் கொலை வழக்கு நேற்றுக் காலை நீதியரசர் எச் டபிள்யு தம்பையா கியூ ஸி முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டபோது சாட்சியமளித்த விவேகானந்தராசா மனைவி ராஜேஸ்வரி மேற்சண்டவாறு கூறினர்.

இவ் வழக்கில் 1965-ம் ஆண்டு ஜூன்மாதம் 2-ம் திகதி. உரும்பராயில் கதிரவேலு கந்தசாமி, என்பவர் இராமன் ஐயாத்துரையை கொலை செய்ததாகக்குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

எதிரி சார்பில், அட்வகேட் எஸ் சரவணமுத்து, அட்வகேட் ரி கணேசலிங்கத்தின் உதவியுடனும் புறக்டர் வி செல்லத்துரையின் அனுசரணையுடனும் ஆஜரானர் எதிர்க்காகஅரசாங்கத்தால் புறக்டர் வி நடராசா நியமிக்கப்பட்டிருந்தார்

ராஜேஸ்வரிசாட்சியமளிக்கையில் தொடர்ந்து கூறியதாவது:- சம்பவம் நடந்தபொழுது நான் உரும்பராயில் கடைவைத்திருந்தேன். எதிரியை எனக்குத்தெரியும். அவரின்வீடு கடைக்கு 50 யார் தூரத்திலுள்ளது. கடை வாசலில் நின்று பார்த்தால் எதிரியின் வீடு தெரியும்.

அன்றுகாலைகாலஞ்சென்ற ஐயாத்துரை கடைக்குக்காசு மாற்ற வந்தார். அவருக்கு மிகுதி 50 ரூபாகொடுக்க வேண்டியிருந்தது. அன்று பிற்பகல் 3 மணிக்கு அவர் மிச்சக்காசுவாங்க மீண்டும் வந்தார். அப்பொழுதுநான் கடைக்கு முன்னால் பிள்ளைகளுக்குப் பால் கொடுத்துக் கொண்டிருந்தேன். காசு தாறேன் நில்லுங்கள்என்று அவரிடம் கூறினேன். எதிரியின் மனைவியையும்எனக்குத் தெரியும் எதிரியின் மனைவி கடைக்கு விஸ்கோத்து வாங்க வந்திருந்தார். கடையில் உள்ள பொடியன் விஸ்கோத்தைக் கொடுத்தான். எதிரியின் மனைவி எனக்கருகில் வந்து நின்றார்.

எதிரி கந்தசாமி கடையை நோக்கி வந்து, தமது மனைவியைக்காலால் உதைத்துவிட்டுச் சென்றார். மனைவியும் பின்னல் சென்றார் பின் சிறிதுநேரத்தில் எதிரி திரும்பி வந்து இடுப்பில் இருந்த வெள்ளைப்பிடிக் கத்தியை எடுத்து பொத்திப் பிடித்து ஐயாத்துரையின் வயிற்றில் குத்தினர். மீண்டும் அதே கத்தியால் நெஞ்சில் குத்தினர். அதன்பின் எதிரி வீட்டுப்பக்கமாய்ப் போனார். ஐயாத்துரை நிலத்தில் விழுந்துவிட்டார். சம்பவம் நடந்தபோது எனது கணவன் கடையில் இல்லை. அவர்சாமான் வாங்க யாழ்ப்பாணம் சென்றிருந்தார். கணவன் வந்ததும் நடந்தவற்றைக் கூறினேன். அன்று பொலிசாரிடம் வர்க்குமூலம் அளித்தேன்!

டாக்டர் மு.வேதாரணியம் சாட்சியமளித்தார். இன்று காலை தொடர்ந்து விசாரணை நடைபெறும்.

---

### தமிழரசுக் கழக

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ளர்கள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.

தமிழரசுக் கட்சியின் தேசிய மகாநாட்டில்கூடக் கலந்துகொள்வதற்குப் பிரதமர் டட்லி சம்மதம் தெரிவித்துப் பலத்த எதிர்ப்புகளுக்கிடையே அழைப்பை ஏற்றிருந்தார். இப்படியானதொரு இக்கட்டான நேரத்தில் அரசாங்கத்தில் சேர்ந்திருக்கும் தமிழரசுக்கட்சி தனது வேலைநிறுத்தப் பயமுறுத்தலின் மூலம் பிரதமரின் முகத்தில் அறைந்துவிட்டதென்று அவர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

'தொழிலாளர் போராட்டம்' என்று வர்ணித்து எதிர்க்கட்சியினர் நடத்திவரும் இந்த வேலைநிறுத்தத்தில் தமிழரசுக்கட்சி தோட்டத் தொழிலாளர் யூனியன் சேர்ந்திருக்கிறது. இது துரோகமானதொரு செயலாகும். எதிர்க்கட்சிகளின் இந்த வேலைநிறுத்த நடவடிக்கை உண்மையில் அரசாங்கத்தின் கௌரவத்துக்குப் பங்கம் விளைவித்து நெருக்கடியான நிலையொன்றை ஏற்படுத்துவதுதான்' என்று அரசியல் நோக்கர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்

#### அரசாங்க அங்கத்தவர் கருத்து

அரசாங்க பின் ஆசன அங்கத்தவர்கள் இன்று காலையில் இதுபற்றி அபிப்பிராயம் தெரிவிக்கையில், அரசாங்கத்துடன் இணைந்திருக்கும் தமிழரசுக்கட்சி தோட்டத்தொழிலாளர்களின் கோரிக்கைகளை அரசாங்கத்திடம் சமர்ப்பிக்காது திடீரென வேலைநிறுத்தத்தில் இறங்க முடிவுசெய்திருப்பதன் மூலம் ஒழுக்கக்கேடான முறையில் அவர்கள்நடந்துவிட்டனரென்றும் தமிழரசுக்கட்சித்தோட்டத் தொழிலாளர் யூனியனின் இம்முடிவு கேட்டு தாங்கள் அதிர்ச்சியடைந்ததாகவும் கூறினர்.

#### முதற்தடவை

தேசியஅரசாங்கம்அமைக்கப்பட்டபின்னர் முதற்தடவையாக; அரசாங்கக்கட்சியின் ஒழுங்கு விதிமுறைகள் மீறப்பட்டுள்ளன. இதற்காக தமிழரசுக்கட்சிக்கு முதலில் நன்றிசெலுத்த வேண்டும்' என்று அரசாங்கக்கட்சி பின் ஆசன அங்கத்தவர்கள் கேலி செய்தனர்.

தற்போதைய வேலைநிறுத்தம் பற்றி செவ்வாய்க்கிழமை கூடும் அரசாங்க பார்லிமெண்டரிக்குழுக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டால் தமிழரசுக்கட்சியின் வேலைநிறுத்தப் பயமுறுத்தலும் ஆராய்யப்படவேண்டுமென்று இவர்கள் கேட்டுள்ளனர்.

---

### வால்கோட்

சென்னை, ஜூன் 18

அமெரிக்கபிரஜை டேனியேல் வாலுகாட், பிரெஞ்சு பிரஜை இயன் டோன்ஸ் ஆகியோர் மீதான மோசடி வழக்கை பிரதம மாகாண மாஜிஸ்திரேட் திரு. வி. பலராமையா வருகிற 23,24-ம் திகதிகளுக்கு ஒத்திவைத்தார்.

---

### ராஜினமா

களுத்துறை, சனி

களுத்துறை மாவட்ட நீதிபதி திரு. கே. மம்பிற்றியா தமது பதவியிலிருந்து ராஜினமா செய்துள்ளார். மாத்தறையிலுள்ள நீதிமன்றத்தில் அவர் முன்னதுபோல் தமது தொழிலை மீண்டும் ஆரம்பிப்பார்.

---

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் [illegible] யாழ்ப்பாணம் [illegible] கோவில் மேலே வீதி. 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஜூன் மாதம் 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org